உதயன்

விலை ரூபா 7.00

வள்ளுவர் ஆண்டு 2034 தை 28 செவ்வாய்க்கிழமை (11-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:77

நெடுந்தீவுக் கடலில் நடந்த சோகச் சம்பவம்:

# தவறான தகவல்கள் வெளியிட்டதை கண்காணிப்புக் குழு ஏற்கின்றது

## திருத்துவதற்கு நேற்று புதிதாக நீண்டதோர் அறிக்கை

நெடுந்தீவுக் கடலில் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நடுநிசிக்குப் பின்னர் நடந்த சோக சம்பவம் குறித்து தவறான தகவல்களை கண்காணிப்புக்குழு வெளியிட்டது. அதைக் கண்காணிப்புக் குழு இப்போது ஒப்புக்கொள்கிறது. தவறைத் திருத்தும் வகையில் நீண்டதோர் அறிக்கையை கண்காணிப்புக் குழு நேற்று விடுத்திருக்கிறது.

"படகுகளில் இருந்த கடற்படையினரும் விடுதலைப் புலிகளும் ஆரம்பத்தில் இருந்து புலிகளின் ட்றோலர் தீவைத்துக் கொளுத்தப்படும்வரை கண்காணிப்புக் குழுவினருடன் தொழில்சார் முறையில் ஒத்துழைப்புடன் நடந்து கொண்டார்கள். ஆரம்பத்தில் அரைகுறையாகவோ, தவறாகவோ தகவலகளை வெளியிட்டதற்கான பொறுப்பை கண்காணிப்புக்குழு ஏற்றுக்கொள்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# உணர்வுபூர்வ எழுச்சியுடன் கடற்புலி கப்டனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,பெப்.11

நெடுந்தீவுக் கடற்பரப்பில் காவியமான கடற்புலி கப்டன் பொதிகைத் தேவனின் (சிவஞானசுந்தரமூர்த்தி தயாபரன்) இறுதி அஞ்சலி நிகழ்வுகள நேற்று வடமராட்சிப் பிரதேசமெங்கும எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். உணர்வுபூர்வ நிகழ்வுகளின் பின்னர் கப்டன் பொதிகைத் தேவனின் நடுகைக்கல் எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றிரவு திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

முன்னதாக, பொதிகைத்தேவனின் திருவுருவப்படம் வடமராட்சி, புலோலி தெற்கிலுள்ள அவரது இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் நண்பகல் 1.00 மணியளவில் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

ஊர்வலம் மந்திகைச் சந்தியூடாக நெல்லியடியை அடைந்தது. அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. ஊர்வலம் தொடர்ந்து பருத்தித்துறை சென்றதும் அங்கும் வீரவணக்கக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் திருகோணமலையில் தொடர்கின்றன

# பேர்ளின் பேச்சுக்களில் புலிகள் கடும் ஆட்சேபம்

டோட்மண்ட்,பெப்ரவரி11

**புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதானத்துக்கான சூழல் தோன்றியுள்ள இன்றைய நிலையிலும் கிழக்கில் குறிப்பாக திருகோணமலையில் பரவலான, திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக விடுதலைப் புலிகள் கடும் குற்றச்சாட்டுத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பேர்ளினில் நடந்த பேச்சுக்களில் தமது கடும் ஆட்சேபத்தையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

**இத்தகைய குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்றும் அரச பிரதிநிதிகளிடம் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.**

**இது குறித்த தகவல்களை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜேர்மனியில் வெளியிட்டுள்ளார்.**

கடந்த ஞாயிறன்று மாலை ஜேர்மனியில் டுஸல்டோர்வ் நகருக்கு அண்மையில் டோட்மண்டில் நடைபெற்ற இலங்கைத் தமிழர்களின் கூட்டத்தில் தமிழ்ச்செல்வன் உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.


அங்கு அவர் தெரிவித்ததாவது:-

இந்த யுத்த நிறுத்த காலத்திலும் - அமைதிப் பேச்சு நடக்கும் வேளையிலும் திருகோணமலை மாவட்டத்

(11ஆம் பக்கம் பார்க்க)

## சோகத்தில் துவளும் உறவுகள்





எதிர்ப்பவர்களைப் பற்றிக் கவலையில்லை

# யாழ். பொது நூலகத் திறப்புவிழா பெப். 14 நிச்சயம் நடந்தே தீரும்!

## யாழ். மாநகர முதல்வர் சூளுரை

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.பொதுநூலகம் திட்டமிட்டபடி எதிர்வரும் 14ஆம் திகதி திறந்து வைக்கப்படும். எதிர்வரும் 20ஆம் திகதி முதல் அது மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளது. இவ்வாறு நேற்று யாழ்.மாநகர சபையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ்.மாநகர முதல்வர் செ.சுந்தையன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நூலகப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட 12 கோடி ரூபாவில் நூற்றுக்கு 99.1 சதவீதமான புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. எனவே எதிர்வரும் 14ஆம் திகதி இதனைத் திறப்பது என மாநகரசபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி இதனை மக்கள் பாவ

(11ஆம் பக்கம் பார்க்க)

# தகர்த்த படகின் பாகங்கள் கடற்படையினால் மீட்பாம்!

கொழும்பு,பெப்.11

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினரின் முற்றுகைக்கு உட்பட்ட சமயம் விடுதலைப் புலிகள் தகர்த்த படகின் சில பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படை உயர் அதிகாரி கூறியுள்ளார்.

அந்தப் பகுதியில் கடற்படையின் சுழியோடிகள் தேடுதல்களை மேற்கொண்டதாகவும் -

அச்சமயம் தகர்க்கப்பட்ட படகின் சில பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் -

வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் தற்பொழுது கடற்படையினர் 24 மணிநேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்தே இந்த 24 மணிநேர ரோந்து உத்தரவு கடற்படைத் தலைமையகத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3-4)

# முழுமையாக பூர்த்தியாகா நிலையில் நூலகத்தைத் திறப்பது நல்லதல்ல

## கல்வி மேம்பாட்டு பேரவை அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.நூலகத்துக்கு குறைந்தபட்சமான பௌதிக வளங்கள், நூல் வளங்கள் என்பனகூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் அதனைத் திறப்பது நல்லதல்ல. வசதிகள் அற்ற நிலையில் நூலகம் திறக்கப்படுமானால் மீதி வேலைகள் நிறைவேற்றப்படுவதில் தாமதம் ஏற்படலாம்.

இப்படிக் கூறியுள்ளது யாழ்.கல்வி மேம்பாட்டு பேரவை.

எதிர்வரும் 14ஆம் திகதி யாழ்நூலகம் திறக்கப்படுவது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொது நூலகம் கல்வியாளர்களும், மாணவர்களும், பொதுமக்களும் பயன்படுத்தும் ஒரு கல்விக் களஞ்சியமாக விளங்க வேண்டியதொன்றாகும். அவ்வாறான ஒரு நூலகம் எவ்வகையான வளங்களையும் அதாவது

(11ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

SHARP
விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
39, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
14, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி 01-360290,360291,074-512...

## நமீபியாவை வென்றது ஸிம்பாப்வே!

ஹராரே,பெப்.11

எட்டாவது கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டியில் நேற்று நடந்த ஸிம்பாப்வே - நமீபியா அணிகளிடையேயான ஆட்டத்தில் சிம்பாப்வே அணி இலகுவாக வெற்றிபெற்றது.

நேற்று ஹராரே நகரில் இந்த ஆட்டம் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாவே அணி மிகச் சிறப்பாக ஆடி 2 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்களைக் குவித்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாளர் கிரேக் வைசார்ட் ஆட்டமிழக்காமல் 151 பந்துகளில் 172 ஓட்டங்களைக் குவித்தார். இம்மைதானத்தில் ஒருநாள் போட்டி ஒன்றில் வீரர் ஒருவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். ஸிம்பாப்பே சார்பில் ஒரு நாள் போட்டியொன்றில் வீரர் ஒருவர் பெற்ற ஆகக்கூடுதலான ஓட்ட எண்ணிக்கையும் இதுவே. கிரனாட் பிளவர் 55 ஓட்டங்களில் 78 ஓட்டங்களை விளாசினார்.

ஸிம்பாப்பே அணி ஒருநாள் போட்டிகளில் தனது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையை இப்போட்டியில் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஸிம்பாப்பே அணி துடுப்பெடுத்தாடிய பின் மழை குறுக்கிட்டது. இதனால் நமீபியா வெற்றி பெறுவதற்கு டக்வேர்த் - லூயிஸ் விதிகளின்படி 25.1 ஓவர்களில் 191 ஓட்டங்கள் என்னும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட ஓவர்களில் நமீபிய அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 104 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அந்த அணி சார்பில் டி.கியூல்டர் 27 ஓட்டங்களைப் பெற்றார் அதுவே அந்த அணியின் ஆகக்கூடுதலான ஓட்ட எண்ணிக்கையாகும்.

87 ஓட்டங்களால் ஸிம்பாப்வே அணி வெற்றி பெற்றது. (ம)

SHARP Action of the day



-நேற்றைய ஆட்டத்தில் அபாரமாக சதம் குவித்த சனத் ஜயசூரிய விளாசும் காட்சி. 120 ஓட்டங்களைக் குவித்தார் அவர்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் BROWNS ELECTORINICS Browns

## சாதித்தார் லாரா

எட்டாவது கிரிக்கெட் உலகக் கிண்ண ஆரம்ப ஆட்டத்தில் தென்னாபிரிக்க - மேற். இந்திய அணிகள் மோதின. யாரும் எதிர்பாராத விதமாக மேற்.இந்தியா வென்றது. ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமைந்தது இந்த ஆட்டம். மிகவும் விறுவிறுப்பாகவும் சுவாரஸ்யமாகவும் இருந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற மே. இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பம் சரியாக அமையவில்லை. ஆரம்பத் துடுப்பாளர்கள் கைலும் ஹிண்டிஸும் சொற்ப ஓட்டங்களுடன் 'பெவிலியனு'க்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். அந்தப் பெருமை ஷோன் பொலக்கையே சாரும். 6.4 ஓவர்களில் மே.இந்திய பெற்றதோ வெறும் 7 ஓட்டங்கள் மட்டுமே. ஆனால், இழந்ததோ இரு விக்கெட்டுக்கள். அதன்பின் வந்தவர் நம்பிக்கை நட்சத்திரம் பிறையன் லாரா. அவருடன் இணைந்தவர் சந்தர்போல். இருவரும் முதலில் சற்று மெதுவாக ஆரம்பித்தனர். பின்னர் வேகங்கொண்டனர். லாரா நிதானமாக நின்று கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் விளாசினார். 3ஆவது விக்கெட்டுக்காக சந்தர்போலுடன் சேர்ந்து அவர் 102 ஓட்டங்களைக் குவித்தார். 60 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்று சந்தர்போல் ஆட்டமிழந்தார். அடுத்து வந்தவர் அணித் தலைவர் ஹூப்பர். வந்த வேகத்தில் நிதானமாக அதேநேரம் அதிரடியாக ஆடினார். அவர் 40 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

லாரா மிகச் சிறப்பாக ஆடி தன் பலத்தை நிரூபித்தார். 134 பந்துகளில் அவர் 116 ஓட்டங்களைக் குவித்தார். ஒரு நாள் போட்டிகளில் லாராவின் 16ஆவது சதம் இது. தனது



மே.இந்தியாவுடனான ஆட்டத்தில் பொலக்கின் அருமையான பிடி.

முதலாவது ஐம்பதை 78 பந்துகளில் பெற்ற அவர், அடுத்த ஐம்பதை 43பந்துகளிலேயே பெற்றார். அவர் ஆட்டமிழந்தபோது மே.இந்திய அணி 5 விக்கெட்டுக்கள் இழப்பில் 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன் பின் வந்தவர் ரிக்கார்டோ பவல். அவர் இப்படி அதிரடியாக பந்துகளை விளாசித் தள்ளுவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. காட்டுத்தனமாக ஆடினார் அவர். பந்துகள் மைதானத்தின் எல்லைக் கோடுகளைத் தாண்டி பறந்தன. அவருடன் இணைந்து சர்வானும் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களின் பந்துகளை துவம்சம் செய்தார். சர்வான் 15 பந்துகளில் 32 ஓட்டங்களைக் குவித்தார். பவல் 18 பந்துகளில் 4பௌண்டரிகள் ஒரு சிக்ஸ் அடங்கலாக 40 ஓட்டங்களை விளாசித் தள்ளினார். இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் 278 ஓட்டங்களைப் பெற்றது மே.இந்தியா.

தென்னாபிரிக்காவை துரதிர்ஷ்டம் இந்த உலகக் கிண்ணப் போட்டியிலும் விடுவதாக இல்லை. அது குறித்த நேரத்தில் பந்துவீசி முடிக்கவில்லை என்பதால் இலக்கை 49 ஓவர்களிலேயே அடையவேண்டும் என்று ஆட்ட மத்தியஸ்தரால் அறிவிக்கப்பட்டது.

களமிறங்கியது தென்னாபிரிக்காவின் கிப்ஸ் - கேர்ஸ்டன் ஜோடி. ஆரம்பத்தில் இருவரும் வேகமாக ஓட்டங்களைக் குவித்தனர். 24 ஓட்டங்களைப் பெற்றபோது கிப்ஸ் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த டிப்பென்னரும் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்ன தென்னாபிரிக்கா பெரும் நெருக்கடியில் சிக்கிக்கொண்டது. கலிஸ், ஜொன்டி ரோட்ஸ், பொலக் ஆகியோர் மிகச் சொற்ப ஓட்டங்களுடன் சரிந்தனர். விக்கெட்டுக்கள் சரிவதைக் கண்ட கேர்ஸ்டன் அடித்தாடுவதே பாவம் என்பது போன்று பந்துகளை தடுத்தாடிக்கொண்டிருந்தார். 92 பந்துகளைப் பெற்று அவர் பெற்றது 69 ஓட்டங்கள் மட்டுமே. தென்னாபிரிக்கா இப்போது வெறும் 160 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. களத்தில் நின்றவர் விக்கெட்காப்பாளர் பௌச்சர். வந்து இணைந்தவர் அதிரடி மன்னன் குளூஸ்னர். கேட்கவும் வேண்டுமா! இப்போது மே.இந்தியாவுக்கு தலையிடி ஆரம்பமானது. பந்துகள் நாற்புறமும் பறக்க ஆரம்பித்தன. இருவரும் இணைந்து அணியை வெற்றியின் விளிம்பு நோக்கிக் கொண்டு செல்ல ஆரம்பித்தனர். விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாகச் சரிந்ததைக் கண்ட தென்னாபிரிக்க ரசிகர்களுக்கு இப்போது புதுத் தெம்பு வந்தது. பௌச்சர் ஒவ்வொரு பந்துக்கும் ஒவ்வோர் ஓட்டம் என்ற ரீதியில் ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டிருந்தார். இடையிடையே பௌண்டரிகளும் பறந்தன. மறுபுறத்தில் நம்பிக்கை தரும் விதத்தில் குளூஸ்னர் சிக்ஸர்களை விளாசிக் கொண்டிருந்தார். அவரது ஆட்டம் அணிக்கு வெற்றியை தேடித் தரும் என்று அனைவரும் நம்பியிருந்தனர். ஆனால், ஓவர்கள் கைவசம் இல்லை. இறுதி ஓவரில் 9 ஓட்டங்கள் மட்டுமே பெறவேண்டும் என்ற இலகு நிலைக்கு அணியை குளூஸ்னரின் அதிரடி ஆட்டம் இப்போது கொண்டு வந்துவிட்டது. கடைசி ஓவரின் 3ஆவது பந்தில் சிக்ஸர் அடிக்க முயன்றார் குளூஸ்னர். எல்லைக் கோட்டின் வெகு அருகே நின்ற ஹூப்பர் அழகாக அந்தப் பிடியை எடுத்தார். தென்னாபிரிக்காவின் நம்பிக்கை தகர்ந்தது. அடுத்து வந்த நிற்னி இரு பந்துகளைச் சந்தித்து ஆட்டமிழந்தார். கடைசிப் பந்தில் வெற்றிபெற 8 ஓட்டங்கள் தேவை. நிக்கி போஜேயால் ஒரு பௌண்டரி மட்டுமே விளாச முடிந்தது. இன்னும் ஓர் ஓவர் இருந்தால் தென்னாபிரிக்கா வென்றிருக்கும். ஆனால், அதற்குத்தான் விதி சதி செய்து 49 ஓவர்களாகக் குறைத்துவிட்டதே. மே.இந்தியத் தீவுகள் அணி 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆட்டநாயகன் லாரா.

நல்லது! வாசக நெஞ்சங்களே நாளை மீண்டும் சந்திக்கலாம்.

- கனிமொழி

## ஆஸி. - பாக் மோதல் இன்று

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இன்று ஆஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி ஜொஹன்னஸ்பேர்க் நகரில் நடைபெறவுள்ளது.

கடந்த உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இவ்விரு அணிகளுமே மோதின. இதில் ஆஸி. அணி வெற்றி பெற்றது. இந்நிலையில் இம்முறை உலகக்கிண்ணத் தொடரில் இவ்விரு அணிகளும் தமது முதல் போட்டியிலேயே ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன. இதனால் பாகிஸ்தான் பழி வாங்க கங்கணங்கட்டிக்கொண்டுள்ளது.

இப்போட்டியில் இரு முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் பங்குபற்ற முடியாதுள்ளமை ஆஸ்திரேலியாவுக்கு பின்னடைவாகவுள்ளது. அதிரடி வீரர் மைக்கல் பெவன் காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகியுள்ளார். வி.பி. கிண்ணத்தொடரின்போது டெரன லீமனுக்கு ஐந்து போட்டிகளில் பங்குபற்ற தடை விதிக்கப்பட்டது. எனவே, ஆஸ்திரேலிய அணியின் முதலாவது போட்டியில் அவர் விளையாட முடியாதுள்ளார்.

இதனால் 5 முன்னணி துடுப்பாட்ட வீரர்களுடனேயே ஆஸ்திரேலியா இன்றைய போட்டியில் களமிறங்கவுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் அணி இப்போட்டியில் வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது என பாக் அணியின் பயிற்றுநர் றிச்சட் பைபஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாக். வீரர்களான வஸீம் அக்ரம், சொகைப் அக்தார் ஆகியோரும் ஆஸ்திரேலியாவை தோற்கடிப்பதற்கு உறுதி பூண்டுள்ளனர்.

இதேவேளை ஆஸி. வீரர்களான மத்யூ கைடன், கில்கிறிஸ்ட், பொன்டிங் ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்வதற்கு அக்தார் உறுதி பூண்டுள்ளார். பிரட்லீ போட்டியில் வெற்றி தேடிக கொடுக்கக் கூடியவர் அல்லர் எனவும் அக்தார் கூறியுள்ளார். (ம-10)

உதயன்
கிரிக்கெட் உலகக் கிண்ணம் 2003
World Cup 2003

## முத்தையா முரளிதரனின் கையெழுத்து வேட்டை

இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனிடம் கையெழுத்து வாங்குவதற்கு உலகமெங்கும் ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

ஆனால், இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளின்போது ஏனைய வீரர்களிடம் கையெழுத்து வாங்குவதில் முரளி மும்முரமாகியிருந்தார்.

மூன்றாவது தடவையாக உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுகிறார் முரளி.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் 14 அணிகளைச் சேர்ந்த 210 வீரர்களிடமும் முரளி கையெழுத்து வாங்குவதில் ஈடுபட்டார். தனது பிரத்தியேக ஞாபகார்த்தத்திற்காக இக்கையெழுத்துக்களைச் சேகரித்துள்ளார் முரளி.

சுற்றுப்போட்டியின் ஆரம்ப வைபவத்திற்காக கேப்டவுனில் 'கலினன்' ஹோட்டலில் வீரர்கள் தங்கியிருந்தனர்.

அன்று காலை உணவின்போது சிறிய துடுப்புக்களை பல்வேறு அணிகளிடமும் அனுப்பி கையெழுத்துக்களைப் பெற்றார் முரளி. அங்கு தவறவிட்ட வீரர்களிடம், அணிகளின் உத்தியோகபூர்வ பயிற்சியின்போது கையெழுத்துக்களைப் பெற்றுக் கொண்டார்.

"சகல அணிகளினதும் அனைத்து வீரர்களின் கையெழுத்துக்களையும் நான் பெற்றுள்ளேன். இதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்." இவ்வாறு முரளி கூறியுள்ளார். (ம-10)

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர் புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021-2225408

ASIAN COMPUTER EDUCATION
26.ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
intel AMD Canon EPSON Genius
173/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

# தேசியத் தலைவர் தொடங்கியுள்ள

# தமிழீழ நிதித்திட்டத்துக்கு உதவுங்கள்; பலன் கிட்டும் போது பூரிப்படைவீர்கள்!

## ஜேர்மன் பொதுக்கூட்டத்தில் பாலா உரை

-பேர்ளினிலிருந்து ந.வித்தியாதரன்-

*ஜேர்மனியின் டுஷில்டோவ் நகருக்கு அண்மையில் டோட்மண்ட் என்ற இடத்தில் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார். அந்த உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமானது. எஞ்சியபகுதி இங்கு பிரசுரமாகின்றது.*

எங்களை 'பயங்கரவாதிகள்', 'வன்முறையாளர்கள்', 'தீவிரவாதிகள்' என்று அழைத்த உலக நாடுகள் இப்போது மாதம் ஒரு தடவை கௌரவத்தோடு - உரிய மரியாதையோடு - அழைத்து வரவேற்புத் தருகின்றன. அந்த வரிசையில் இம்முறை ஜேர்மனுக்கும் அழைக்கப்பட்டிருக்கிறோம். எமது இராஜதந்திர ரீதியிலான நகர்வுதான் - நடவடிக்கை தான் - இந்த மாற்றத்துக்கு காரணம்.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடமாகின்றது நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாகி ஐந்து மாதங்களாகின்றன. இந்தக் கால கட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன?

களத்தில் அழிவுகள் உயிரிழப்பு இல்லை. பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் எல்லாப் பொருள்களும் தடையின்றி வடக்கு, கிழக்குக்குச் செல்கின்றன. அத்தியாவசியப் பொருள்கள் தடையின்றிக் கிடைக்கின்றன. சிங்கள, முஸ்லிம் வர்த்தகர்கள் வடக்குக்கு வருகின்றார்கள். வடக்கு - தெறகு இணைப்புப் பாலம ஏற்பட கண்டி வீதி திறந்து விடப்பட்டிருக்கின்றது. போக்குவரத்து நடைபெறுகின்றது. தமிழர் தேசத்தின் பொருளாதாரம் மெல்ல மெல்ல துளிர்விட்டு வளரத் தொடங்கியிருக்கின்றது.

ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட முக்கிய பலவிடயங்கள் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

நமது கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்பும், நெருக்கடியும் தீவிரமாகத் தொடர்கின்றன. சுமார் நாற்பதாயிரம் ஆக்கிரமிப்பு துருப்புகள் பாடசாலைகள், கோயில்கள், பொதுக்கட்டடங்கள் என்பவற்றை ஆக்கிரமித்து நிற்கின்றன; அங்கிருந்து விலகவில்லை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் வாழ்விடங்களான கிராமங்கள், வயல் நிலங்கள் என்பன பெரிய அளவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. போர்நிறுத்த ' புரிந்துணர்வு - ஒப்பந்தப்படி இவற்றிலிருந்து இராணுவம் விலகியிருக்க வேண்டும். ஆனால், விலகவில்லை.

ஒவ்வொரு சுற்றுச் சமாதானப் பேச்சிலும் இதனை வலியுறுத்துகின்றோம். ஆனால், அங்கிருந்து விலகினால் தமது பாதுகாப்புக்கு ஆபத்து என்று சாட்டுச் சொல்லி இராணுவம் விலக மறுக்கின்றது.

இதேபோன்று இடம்பெயர்ந்த நமது மக்களை மீளக்குடியமர்த்தி, புனர்வாழ்வு அளிக்கும் பணியும் இழுபட்டுச் செல்கின்றது. இதற்காக 'சிரான்' உபகுழு அமைக்கப்பட்டும் அதற்கு உரிய நிதி மற்றும் வசதிகள் இன்னும் வழங்கப்படவில்லை இதனாலும் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாமல் உள்ளனர்.

சமாதானம் வந்துவிட்டது எனவே, எமது மக்கள சந்தோஷமாக, சுபீட்சமாக வாழ்கின்றார்கள் என்று கூற முடியாது. எமது மக்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும், அவர்களின் வாழ்க்கையை வளமாக்க வேண்டும், என்றுதான் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தினோம் ஆனால், அதை நடைமுறைப்படுத்த முடியாத நிலை - பின்னடைவு - காணப்படுகின்றது.

சிங்கள அரசைப் பொறுத்தவரை இரண்டு அதிகார மையங்கள் உள்ளன. ஒன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. மற்றையது நாடாளுமன்ற அரசு.

அந்த அரசின் தலைவரான பிரதமர் ரணிலுடன்தான் நாம் பேசுகின்றோம்.

ஆனால், நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதி அம்மாவிடம் தான் உள்ளன.

சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையில் ரணிலும் புலிகளும் எடுக்கும் முடிவுகளைத் தடுக்கும் விதத்தில் ஆயுதப்படைகளுக்கு ஜனாதிபதி உத்தரவுகளை வழங்குகின்றார். அதன் மூலம் பேச்சு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை - தடை - போடுகின்றார்.

கொழும்பு அரசில் தனித்துவமான மையம் இல்லை. அரசு முரண்பட்ட இரு கூறுகளாகப் பிரிந்து நிற்கின்றது. அதுதான் பேச்சு நடவடிக்கைகளும் சமாதான முயற்சிகளும் முன்னகர முடியாமல் சிக்கல்படுவதற்குக் காரணம்.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் ஒரே தலைமை, ஒரே இயக்கம், ஒரே மக்கள், ஒன்றுபட்ட சக்தி என்ற அடிப்படையில் பேச்சில் ஈடுபட்டிருக்கின்றோம்.

ஆனால், சிங்களதேசம் சிதறுபட்டுக்கிடக்கின்றது நாம் ஒற்று மையாக பலத்தோடு நின்று சமாதானப் பேச்சில் இறங்கியுள்ளோம்.

சிங்கள அரசியல் உலகு பிளவுபட்டு நிற்கின்றது. அதற்கு மேல் பேரினவாதிகளுக்கும் பௌத்த பீடங்களும் துள்ளிக் குதிக்கின்றன. இதனால் தான் எமது நியாயமான - ஏகோபித்த - கோரிக்கைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் சிங்களத் தலைமை தள்ளாடுகின்றது. எமது அடிப்படை உரிமைகளை ஏற்கமுடியாமல் தடுமாறுகின்றது.

இதுவே சமாதான முயற்சிகள் விரைவாக முன்னேற்ற முடியாமல் இருப்பதற்குக் காரணம்.

தமிழர்களைப் பொறுத்தவரை சமாதான முயற்சிகள் புதியனவல்ல. ஐம்பது வருட அரசியல் வரலாற்றில் எத்தனையோ தடவைகள் நாம் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அத்தகைய முயற்சிகளில் பல தடவை ஈடுபட்டுத் தோல்வி கண்ட பழைய தலைமைகள் இன்று அரசியலில் இருந்து ஒதுங்கியுள்ளன. அந்தப் பொறுப்பைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டு, வெளியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கின்றன.

புலிகளுக்கும் சமாதான முயற்சிகள் இது முதற்றடவை அல்ல. 1985 இல் திம்புவில் தொடங்கி, டெல்லி, கொழும்பு யாழ்ப்பாணம் என்ற வரிசையில் இப்போது தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி என்று அது தொடர்கின்றது.

சமாதானமும் யுத்தமும் என்று எமது முயற்சிகள் மாறி மாறி விரிவடையத் தொடங்கியுள்ளன. ஆனால், இப்போது பேச்சுக்கள் புதிய பரிமாணத்துடன் நடக்கின்றன.

தந்தை செல்வா போன்ற எம்து தலைவர்கள் முன்னர் அஹிம்சை என்ற பலத்துடன் பேசினார்கள். ஆனால், நாம் இப்போது ஆட்லறி என்ற பலத்துடன் பேசுகின்றோம். அவர்கள் சாத்வீக வாதிகளாக - நிராயுதபாணிகளாக - மன்றாட்டமாகப் பேசினார்கள். ஆனால், நாம் இன்று படையணிகள் மற்றும் ஆயுதப் படைகளின் பலத்துடன் - சிங்கள இராணுவத்துக்கு நிகரான நிலையில் இருந்து கொண்டு- எங்களை ஆயுதப் படைப்பலத்தால் தோற்கடிக்க முடியாது என்பதை உணர்த்தி - வலிமையான நிலையில் இருந்து கொண்டு பேசுகின்றோம்.

இந்தச் சமாதானப் பேச்சு முயற்சி தோற்றாலும் தமிழர் தேசம் பலவீனமடைந்துவிடப் போவதில்லை. எங்களுக்கு அதனால் பாதிப்பு ஏற்பட்டு விடப்போவதில்லை.

ஏனென்றால் முன்னெப்போதும் இல்லாதவாறு இம்முறை சர்வதேச உலகம் பேச்சு நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாடும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு இடமளித்து ஆதரவுதர முண்டியடிக்கின்றன. அது இந்த முயற்சியில் அவர்களின் ஈடுபாட்டைக் காட்டுகின்றது. மேற்குலக நாடுகளின் ஆர்வத்துக்கும் அக்கறைக்கும் மத்தியில் - அந்தப் புறச் சூழ்நிலையில் - சர்வதேச கண்காணிப்பில் - இந்தப் பேச்சு நடப்பதால் முன்னைய தடவைகளைப் போன்று இம்முறை சிங்கள அரசு எம்மை ஏமாற்ற முடியாது. பேச்சு மேசையில் ஒரு நடுவர் உள்ளார். பார்த்துக்கொண்டிருக்கிறார். நாம் எதைப் பேசுகின்றோம்? என்ன முடிவுகளை எடுக்கின்றோம்? எனபதை அவதானித்துக் கொண்டிருக்கின்றார். பத்திரிகையாளர் மாநாடுகளில் அவற்றைப் பகிரங்கமாகவும் வெளியிடுகின்றோம்.

தமிழ் மக்கள் தங்களுக்கு நியாயம், நீதி கேட்கின்றார்கள். எமது தாயகத்தில் சுதந்திரமாக - கௌரவமாக



- எம்மை நாமே ஆளக்கூடிய விதத்தில் வாழவிடுங்கள் என்று நியாயமான கோரிக்கையைத்தான் முன்வைத்துள்ளார்கள்.

நாம் நாட்டைப் பிரிக்க விரும்பவில்லை. நாங்கள் பயங்கர வாதிகள் அல்லர். பல்வேறு நாடுகளில் இருப்பது போன்று சமஷ்டி முறையில் - தன்னாட்சி அடிப்படையில் - தமிழருக்கு நியாயமான தீர்வு ஒன்றைத் தாருங்கள் என்றுதான் கோருகின்றோம். உலக நாடுகள் எமது இந்த நிலைப்பாட்டை பெரிதும் வரவேற்றுள்ளன. அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய சமூக நாடுகள் அனைத்தும் வரவேற்றுள்ளன.

இதை வைத்துக் கொண்டு புலிகள் தமிழீழத் தேசியத்தைக் கைவிட்டார்கள் என பிரசாரம் செய்கின்றார்கள். தங்கள் இலட்சியத்தைக் கைவிட்டு விட்டார்கள் என விஷமத்தனமாகச் செய்தி பரப்புகின்றார்கள். அது தவறு தலைவர் தமது மாவீரர் தின உரையில் அதைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தமிழர் தாயகத்தை - சமஷ்டி அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை - தாருங்கள். மறுத்தால் பிரிந்து சென்று தனி அரசை ஸ்தாபிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்று தெளிவாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்களது இந்தக் கோரிக்கை - கொள்கை - வெறும் உணர்ச்சி பூர்வமான ஒன்றல்ல. விஞ்ஞான பூர்வமான அரசியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது அது.

எங்களது இந்தக் கோரிக்கையால் இன்று சிங்கள தேசத்தில் பெரும் குழப்பம்; சஞ்சலம். சுயநிர்ணய அடிப்படையிலான சுயாட்சி என்ற சிக்கலில் பாலசிங்கம் சரியாகக் கொண்டுபோய் விட்டு விட்டுவிட்டார் என்று கருதித் திணறுகின்றன சிங்களத்தலைமைகள்.

இப்போது ஒரு நாடகம் நடக்கின்றது. பாலசிங்கமும் அதில் நடிக்கின்றார். அவர் ஒரு 'இன்ஜின்' என்றால் அந்த 'இன்ஜினோடு' இரண்டு பெட்டிகளையும் தலைவர் கொழுவி விட்டிருக்கின்றார். இருவருமே தளபதிகள் ஒருவர் முன்னர் யாழ். தளபதியாக இருந்தவர். மற்றவர் இப்போதும் கிழக்குத் தளபதியாக இருப்பவர். அவர்களுக்கு யுத்தத்தில் அழித்துத் தான் பழக்கம். பேச்சு மேடையில் அவர்களைக் கட்டுப்படுத்தி அமைதி பேணச் செய்வது எப்போதும் எனக்குக் கஷ்டம்.

இந்தப் பேச்சு ஓர் இராஜதந்திர நகர்வு. இலட்சியப் பயணத்தை நோக்கிய நகர்வு.

நீண்ட யுத்தத்தை தொடர்ந்து நடத்த முடியாது. எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் ஓர் இடைவெளி தேவை. தம்மை ஸ்திரப்படுத்த, வாழ்வை சுபீட்சமாக்க, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஓர் இடைக் காலம் தேவை.

எமது போராட்ட நியாயத்தை சர்வதேச உலகுக்கு எடுத்துரைக்கவும் வாய்ப்புத் தேவை. இந்த இடைவெளியைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தேசமாகச் சென்று அதையும் செய்து வருகின்றோம். முன்னர் உலகத்தால் ஓரம் கட்டபட்டு, ஒதுக்கப்பட்டிருந்த நாம் நமது பிரச்சினையை இன்று ஒவ்வொரு நாடாகச் சென்று எடுத்துரைக்க வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

நாட்டுக்குள் பத்து லட்சம் தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பத்து லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் புனர்வாழ்வுக்கு ஓர் இடைவெளி அவசியம்.

எமது மக்களின் புனர்வாழ்வுக்கும மீள்குடியமர்வுக்கும் எமது கனரக ஆயுதங்களைக் கீழே வைப்பதை நிபந்தனையாக விதிக்க யாழ். இராணுவத் தளபதி கோருகிறார். ஜனாதிபதி சந்திரிகா அதை வரவேற்கின்றார்.

ஆயுதங்களைக் கேட்காதீர்கள் எப்போதும் தர மாட்டோம். சர்வதேச உலகில் வாழும் உங்களிடம் வீடு வீடாக வந்து சேகரித்த பணத்தில் தானே இந்த ஆயுதங்களை வாங்கினோம். அதில் இரகசியம் இல்லை.

அந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டுதான் சிங்கள தேசத்திடம் மேலதிக ஆயுதங்களை அடித்துப் பறித்தோம்.

ஆயுதங்கள் இரண்டு வழிகளில் வந்தன. ஒன்று - நீங்கள் தந்த நிதியினால் கிடைத்தது. மற்றது - நமது போராளிகள் பதினெட்டாயிரம் பேர் தமது உன்னத உயிரை விலையாகக் கொடுத்து சிங்கள தேசத்திடமிருந்து பறித்தெடுத்தது. ஆகவே இந்த ஆயுதங்கள் உங்களுடையவை, எங்களுடையவை அல்ல. உங்களுக்கு ஒரு தீர்வு கிட்டாமல் இதைப் போடுவதற்கு அல்லது கையளிப்பதற்கு நாங்கள் யார்? எனவே எமது மக்களின் பலத்தை நாம் கண்மூடிக்கொண்டு கையை விட முடியாது.

ஆயுதங்களைக் கேட்கும் 'நீ' துணிவிருந்தால் வந்து எடுத்துப் போ. நீ வரமாட்டாய். ஏனென்றால் வந்தால் நீ இருப்பதையும் இழந்து திரும்ப வேண்டியிருக்கும் என்பது 'உனக்கு' நன்கு தெரியும்.

எந்தச் சக்தியும் எம்மை மிரட்டியோ, இராஜதந்திர ரீதியில் அழுத்தம் கொடுத்தோ, நகர்வுகளைச் செய்தோ ஆயுதங்களைக் கீழ வைக்கச் செய்ய முடியாது.

ஆயுதங்கள் எமது ஆன்மபலம், தேசபலம் ஏமாற்றுவதையே வரலாறாகக் கொண்ட சிங்களத் தலைமைகளை நம்பி ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு நாம் ஏமாளிகள் அல்லர்.

உணர்ச்சிப் பேச்சில் பயனில்லை. அடி, உதையில் தான் பயன் உண்டு அதை நாம் மறந்துவிட முடியாது.

இப்போதைய சமாதானப் பேச்சுகள் எமது இலட்சியப் பயணத்துக்கு உலகின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஓர் இராஜதந்திர நகர்வு. சமாதானப் பேச்சு என்பதும் ஒரு போராட்ட வடிவமே. அதிலும் முக்கியத்துவம் உள்ளது. எமது மக்களின் உரிமையைக் கேட்கத்தான் பேசுகிறோம். எங்களைப் பொருளாதார ரீதியில், அரசியல் ரீதியில் வளப்படுத்த - பலப்படுத்தத் தான் பேசுகிறோம். அந்தச் செல்நெறியில் பல அர்த்த பரிமாணங்கள் உள்ளன.

பேச்சு முயற்சி மூலம் இதுவரை நாங்கள் செல்ல முடியாத இடங்கள் எங்கும் சென்றுள்ளோம். செயலகங்களைத் திறந்துள்ளோம். போராளிகளை அனுப்பி மக்களுடன் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்தி, புதிய போராளிகளைத் திரட்டி எமது படைப் பலத்தை பெருக்கிக் கொள்கின்றோம்.

சர்வதேச நாடுகளில் வாழும் எங்கள் உறவுகளாகிய உங்களிடம் தமிழீழ நிதித் திட்டத்திற்கு உதவும்படி தலைவர் ஒரு செய்தி அனுப்பியுள்ளார். அது உங்களுக்குக் கிடைக்கும் ஏதோ ஓர் அவசரத் தேவைக்குத் தான் இந்த நிதித் திட்டத்தை தலைவர் தொடங்கியிருக்கிறார். தலைமைப் பீடத்தின் செயல்திட்டம் எது என்று இப்போது கேட்காமல் உங்களால் முடிந்தளவு உதவுங்கள். பலன் கிட்டும் போது பூரிப்பீர்கள்.

சிங்கள தேசம் பொருளாதார ரீதியில் சிதைந்து கிடக்கின்றது. எங்களையும் அழித்து தானும் அழிந்து கிடக்கின்றது. வெளிநாட்டு உதவி இல்லையேல் சிங்கள தேசத்திற்கு மீட்சியே இல்லை; விடிவே கிடையாது.

ஆனால், எங்கள் நிலைமை அப்படியல்ல. யுத்தத்தின் கோரத்தால் எமது தேசக்கட்டுமானம் அழிந்து கிடக்கின்றது. என்பது உண்மைதான். ஆனால், எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமையக்கூடிய நீங்கள் புலம் பெயர்ந்த நமது சகோதரர்கள். நமது சமூகம் - மேலும் மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்த யதார்த்தம் சிங்கள தேசத்திற்குத் தெரியும்.

சிங்கள தேசத்திடம் இன்று யுத்தம் புரியும் ஆற்றல், துணிவு, அர்ப்பணிப்பு இல்லை. இராணுவத்தை - படைகளை விட்டு ஓடுகின்றார்கள். அமெரிக்கா, இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான் என்று பல நாடுகளில் பயிற்சிகள் எடுத்தும் நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்தும் கூட இருபது ஆண்டுகளாகப் புலிகளை அடக்க முடியவில்லை.

ஆகவே யுத்தத்தை நிறுத்திப் பேசுங்கள் பேச்சு மூலம் தீர்வு காணுங்கள் என்று சர்வதேச உலகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தது. அதனால் வேறு வழியின்றி அவர்கள் பேச்சுக்கு வந்துள்ளார்கள்.

பேச்சுமூலம் நிரந்தரத் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையுடன் நாம் பேசுகின்றோம் என்பதல்ல நிலைமை. ஐம்பது வருட அரசியல் சரித்திரம் உங்களுக்குத் தெரியும்.

அப்படியானால் - பேச்சு மூலம் தீர்வு கிட்டும் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் - ஏன் பேசுகின்றீர்கள்? ஏன் பேசப் போகின்றீர்கள்? என நீங்கள் கேட்கலாம்.

சிங்கள தேசத்தின் உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்த - சர்வதேச உலகுக்கு எடுத்துக்காட்ட இந்தப் பேச்சு மேசையை நாங்கள் பயன்படுத்துகின்றோம். அவர்கள் நியாயமாக நடக்கவில்லை என்பதை வெளிப்படுத்த இதனை ஒரு சந்தர்ப்பமாக்குவோம்.

நெடுந்தீவுக் கடலில் எங்கள் போராளிகள் மூவர் அநியாயமாகப் பலியாகும் நிலையை சிங்கள தேசம் ஏற்படுத்தியது. அது சரி வேளை தலைவர் கொதித்துப்போய் இருக்கிறார். சமாதானத்தின் பெயரால் எமது போராளிகள் மூவரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய ஆத்திரமூட்டும் செயலுக்குப் பின்னரும் நாம் பேச்சுமேசையில் இருந்து வெளியேறிவிடவில்லை. அடக்கிக்கொண்டோம். சிங்களவர்களுக்கோ, ஆயுதப்படையினருக்கோ பாதிப்பு நாம் அப்படி நடக்கவில்லை. எமது எதிர்ப்பை - ஆட்சேபத்தை கடுமையான தொனியில் வெளிப்படுத்திவிட்டு பேச்சைத் தொடர்ந்தோம்.

எங்கள் போராளிகளை அவமானப்படுத்துவதும் சுத்தி வைப்பதும் கைது செய்து சிறையில் அடைப்பதுமாக படையினரின் அடாவடித்தனங்கள

TV ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் பணிமனை கந்தரோடையில்


மல்லாகம்,பெப்.11

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரின் வலிகாமம் கோட்டத்திற்குரிய அலுவலகம் சுன்னாகம் கந்தரோடை வீதியில் முதலில் உடுவில், தெல்லிப்பழை பிரதேசங்களுக்கான அரசியற்பணிமனை முன்னர் இயங்கிய கட்டடத்தில் திறக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்தில் இயங்கி வந்த பிரதேச பணிமனை சுன்னாகம் பிரதான வீதிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. (எ-ரி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 18 08 1917



அம்பாள் அடியில் 14 01 2003

## அமரர் மாணிக்கம் நடனசிகாமணி

(இளைப்பாறிய எக்கவுண்டன்ற்)

*அன்பின் இலக்கணமாய்*
*பண்பின் சிகரமாய் வாழ்ந்த*

**உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.**

நாளை (12.02.2003) புதன்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*நீங்கா நினைவுடன்:*
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.* (14269)

# வீதிகள் பலத்த சேதம் பாதசாரிகள் சிரமம்

மல்லாகம்,பெப்.11

மல்லாகம் சேர்ச் லேன், டிப்போ வீதி என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

இதனால், இந்த வீதிகளூடாக தினமும் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டோர் இவ்வீதிகளை விரைவில் புனரமைத்துத் தரவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.11

'பண்டிதமணி நான்மணி மாலை' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

மட்டுவில் இலக்கியக் கலாநிதி சி.கணபதிப்பிள்ளைமேல் பாடப்பட்ட இந்த நூலின் ஆசிரியர் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஆவார்.

வெளியீட்டு விழா சைவப் புலவர் அ.செல்லத்துரை தலைமையில் இடம்பெறும்.

ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளும், அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரும் நிகழ்த்துவர். வெளியீட்டுரையினை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும், ஆய்வுரையினை கலாநிதி க.சிவலிங்கராசாவும், நயப்புரையினை பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்துவர். (எ-12)

# வாழ்த்துகின்றோம்

உடுவில் அம்பலவாணர் வீதி, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட

## உயர்திரு. கந்தையா முத்தையா
(ஆசிரியர்)

சமாதான நீதிவானாகப் பதவியேற்றதை மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

*திர்ஷிகா கலைக் கூடம்*
*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*

*பெறாமகன்:*
சிற்பகலாவாரிதி ந.சற்குருநாதன்(குரு)
ஆச்சாரியார் குடும்பத்தினர்.

(சி-26455)

# இரண்டாவது வருட நினைவஞ்சலி

மண்ணகம் 04 - 03 - 1952



விண்ணகம் 11 - 02 - 2001

அமரர்
## வைத்திலிங்கம் துரைசிங்கம்

ஆண்டுகள் இரண்டாகிவிட்ட போதிலும்
ஆறவில்லை உம் நினைவு எம் நெஞ்சினிலே!

*5 ஆம் ஒழுங்கை,*
*அரசடி வீதி, நல்லூர்.* (14300)

உம் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்.


இந்த முதலீடு
தினந்தோறும் உங்களுக்குப்
பலன் கொண்டு வரும்



பஜாஜ்
முச்சக்கர வண்டிகள்

விலை ரூ. 193,850/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)

எதிர்காலத்திற்காக முதலீடு செய்வது புத்திசாலித்தனமான செயல். எனினும் அவ்வாறான முதலீட்டை மேற்கொள்ளு முன்னர் அதிலுள்ள சாதக பாதகங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும். அதிலும் பஜாஜ் முச்சக்கரவண்டிகளில் செய்யும் முதலீடானது வியக்கத்தக்க வகையில் முதலீடுசெய்த முதல் தினத்திலிருந்தே பலனளிக்கக் கூடியது.

எனவே பஜாஜ் முச்சக்கரவண்டியில் இன்றே முதலீடு செய்யுங்கள். அதன்மூலம் நீண்டகால பலனைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிட்டுவதோடு நிலையான தினசரி வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு மாதத்திற்கு நீங்கள் உழைக்கும் வருமானத்தை சிந்தியுங்கள். முதலீட்டைப் பெருக்கும் அற்புத வழி இது வென்பதை நிச்சயம் உணர்வீர்கள்.

ஏனைய சலுகைகளைப் பாருங்கள்

- சிறிய அல்லது மலிவான பராமரிப்புச் செலவு
- மலிவான ஓட்டக் கட்டணம்
- சிறந்த எரிபொருள் பாவனை







இலவசம்!

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600. பக்ஸ்: 074-700677, 687175
பிரதேச கிளை அலுவலகங்கள்: 174B,கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134
27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222
382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
ரீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662
31பீ, மைத்திரிபால சேனாணயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050
தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389
இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527

*பஜாஜ் - உங்களது நாளாந்த இலாபத்துடன் பயணிக்கும் முதலீடு*

உதயன்

# பேச்சு தடைப்பட்டாலும் போர் வெடிக்காது!

போர்நிறுத்தம், அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சமாதானப் பேச்சுக்கள் - இவை எல்லாம் தம்முடன் கலந்து ஆலோசிக்காமல் பிரதமர் ரணில் [illegible]வினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் [illegible] அதற்காகத் தமது அதிருப்தியை ஜனாதிபதி தெரிவித்துக்கொள்கிறார்.

அரசு - புலிகள் மேற்கொள்ளும் சமாதானப் பேச்சுக்களால் இதுவரை கிடைத்த நன்மைகள் மிகச் சொற்பம் என்கிறார் ஜனாதிபதி.

புரிந்துணர்வு உடன்படிக்கையால் புலிகள் அதிக ஆதாயம் அடைகிறார்கள். தம்மை வளர்க்கவும் தம்மைப் பலப்படுத்திக்கொள்ளவும் தமது போர்த்திறனை அதிகரிக்கவும் புரிந்துணர்வு உடன்படிக்கையைப் புலிகள் பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கு ரணில் அரசு வழிவிட்டுக்கொண்டிருக்கிறது என்று ஜனாதிபதி குற்றஞ்சாட்டுகிறார்.

உடன்படிக்கையின் பிரகாரம் புலிகள் தம்மைப் பலப்படுத்துவது தவறு. ஆனால், அதனைச் செய்துகொண்டிருக்கிறார்கள். முன்னர் இருந்ததிலும் ஒன்றரை மடங்கு இராணுவ பலத்தை அவர்கள் பெருக்கியுள்ளார்கள். இதனைச் சிலர் இரண்டு மடங்கு எனவும் குறிப்பிடுகின்றனர். கடந்த ஏழரை வருடங்களில் குறிப்பாக யுத்த நிறுத்தத்திற்கு முன் புலிகள் 6 ஆயிரம் பேரைக்கூட கொண்டிருக்கவில்லை. இப்போது 16 ஆயிரம் பேரைக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார் ஜனாதிபதி.

புலிகளால் வடக்கு - கிழக்கில் சட்டம் ஒழுங்கு நிலைமை வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. இதையும் ரணில் அரசு சும்மா பார்த்துக்கொண்டு இருக்கிறது என்றும் ஜனாதிபதி கூறுகிறார்.

இவற்றையெல்லாம் காரணமாகக் காட்டி ஜே.வி.பியினரின் உதவியுடன் ரணில் அரசைக் கலைத்து தமது கட்சியின் ஆட்சியை நிறுவுவது அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்துவதுதான் அவருடைய திட்டம். நாட்டில் இப்போது பொதுவாக நிலவிவரும் கருத்து இது.

புலிகளோடு பேச்சு நடத்திவரும் தற்போதைய அரசுக்கு இப்படி ஏதாவது நடந்தால் பேச்சு முறிந்துபோகும். முன்னர்போல் இப்போதும் பலமாகவே இருந்துவரும் புலிகள் உடனே போரை மீண்டும் ஆரம்பித்து விடுவார்களோ என்ற அச்சம் பொதுமக்களில் ஒரு சாராருக்குண்டு.

அவர்களுடைய அச்சத்தைப் போக்கும் விதத்திலும் சமாதானத்தில் தமக்குள்ள பற்றுறுதியைக் காட்டும் விதத்திலும் ஜேர்மனியில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்திருக்கிறார் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம். தாங்கள் மீண்டும் போருக்குப் போகப் போவதில்லை என்று அவர் உறுதிபடக் கூறியிருக்கிறார்.

"தனது ஆட்சிக் காலத்தில் - இன்னமும் இரண்டு, மூன்று ஆண்டுகளே எஞ்சியிருக்கின்ற நிலையில் - ரணிலின் அரசைக் கவிழ்த்துவிட ஜனாதிபதி அம்மையார் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். எவ்வேளையிலும் ஆட்சி கலைக்கப்படலாம்; நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்.

"ஜனாதிபதியின் அழுத்தங்கள், நெருக்குதல்களால் ரணிலின் ஆட்சி ஆட்டங்கண்ட நிலையில் இருக்கிறது. ஆட்சியின்மீது ஜனாதிபதி எந்நேரமும் கைவைக்கலாம்.

"விடுதலைப் புலிகள் ஆயுதம் சேகரிக்கிறார்கள், தங்கள் இயக்கத்துக்கு ஆள் திரட்டுகின்றார்கள், பயிற்சி அளிக்கிறார்கள், தங்கள் பொருளாதார நிலைமையை வளர்க்கிறார்கள். இவற்றையெல்லாம் செய்வதன்மூலம் அவர்கள் முன்னரிலும் பார்க்க பலம்பெற்று வருகிறார்கள். ஆனால், சிங்களப் படைகளிலிருந்து வீரர்கள் தப்பியோடிவருகின்றனர்; படைகள் பலவீனமடைந்து வருகின்றன.

"இதனால் இராணுவச் சமநிலை பாதிக்கப்பட்டிருக்கிறது; புலிகளுக்கு சாதகமான நிலை உருவாகிவருகிறது. சமாதானம் என்ற பெயரில் புலிகள் தங்களை ஸ்திரப்படுத்தி பலப்படுத்துவதற்குச் சாதகமான நடவடிக்கைகளை ரணிலின் அரசு மேற்கொண்டிருக்கிறது. சமாதானம் என்று சாக்குப் போக்குச் சொல்கிறது அரசு. ஆனால், இராணுவ சமநிலை புலிகளுக்கு சாதகமாக மாறிவருகிறது - என்று ஜனாதிபதி திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்.

"இவற்றைக் காரணங்காட்டி ரணிலின் ஆட்சியைக் கலைத்துவிட அவர் தயாராகி வருகின்றார். எந்தநேரமும் ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்.

"ஆனாலும், நாங்கள் சமாதானத்தில் உறுதியாக இருக்கிறோம். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் நாங்கள் போரில் இறங்கப்போவதில்லை. ஆட்சி கவிழ்ந்தவுடன் யுத்தம் மூண்டு விடும் என்று யாரும் எண்ணவேண்டாம். நாங்கள் தொடர்ந்து யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்போம்; அடுத்த தேர்தல் நடக்கும்வரை காத்திருப்போம்.

"அந்தத் தேர்தல் போரா, சமாதானமா என்பதைத் தீர்மானிக்கப் போகின்ற போட்டியாக இருக்கும். எதையும் தீர்மானிக்கப்போகிறவர்கள் தென்னிலங்கை மக்கள்தான். தேர்தலில் பிரதமர் ரணிலின் அரசு வென்றால் தொடர்ந்து அவரோடு பேசுவோம். சமாதான நடவடிக்கைகளை உறுதியாக முன்னெடுப்போம். போருக்குப் போகமாட்டோம்" என்றார் அன்ரன் பாலசிங்கம்.

அழிவைத்தரும் போரைவிடச் சமாதானத்தையே தாம் விரும்புவதாகத் தலைவர் பிரபாகரனும் தாம் வருடந்தோறும் நிகழ்த்தி வரும் மாவீரர்தினக் கொள்கை விளக்கவுரையில் கூறிவருகிறார்.

ஆகவே, ஜனாதிபதி பேச்சை முறியவைத்தாலும் போர் வெடிக்காது என்று நிம்மதி அடையலாம்.

## 1990ஆம் ஆண்டும், அதன் முன்னரும்

# ஓய்வுபெற்றோரின் கொடுப்பனவுகள் விரைவில் அதிகரிக்கப்படவேண்டும்

## ஊர்காவற்றுறை தொகுதி ஓய்வூதியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.11

1990ஆம் ஆண்டும், அதன் முன்னரும் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றோரின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது ஊர்காவற்றுறை தொகுதி ஓய்வூதியர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் கூட்டம் ஒன்று அண்மையில் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தலைவர் இ.துரைசாமி அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

☆ அரச சேவையிலிருந்து ஏற்கனவே ஓய்வுபெற்றவர்களின் கொடுப்பனவுகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. அதாவது, 1990ஆம் ஆண்டிலும், அதற்கு முன்னரும் ஓய்வுபெற்றவர்களினது கொடுப்பனவுகள் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரித்து இருக்கும் இந்தவேளையில், குறித்த ஓய்வூதியர்களால் வாழ்க்கைச் செலவுகள் மற்றும் வைத்தியச் செலவுகளைச் சமாளிக்கமுடியாமல் உள்ளது. இதனால், அவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆகையால், சம்பந்தப்பட்டவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மறுசீரமைத்து தற்போது ஓய்வுபெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகளுக்குச் சமனாக வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

☆ வேலையற்றிருக்கும் இளைஞர்களையும், யுவதிகளையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கச் செய்வதில் ஈடுபடுத்தவேண்டும்.

இனிமேலாவது யுத்த முஸ்தீபுகளை நிறுத்தி இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் சேர்ப்பதைப் பின்தள்ளி, அவர்களை - மனிதவளத்தை - கமத்தொழில், கைத்தொழில் மற்றும் கடற்றொழில், பெரும் தோட்டப் பயிர்ச்செய்கை, ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தி போன்றவற்றில் ஈடுபடச்செய்ய வேண்டும்.

☆ மக்களின் வாழ்விடத்தில் இருந்து இராணுவத்தினரை அகற்றி, இடம்பெயர்ந்த மக்களை அவரவர் குடியிருப்புகளில் குடியிருத்த வேண்டும். அத்துடன், அவர்கள் தத்தம் சொந்த தொழில்களைச் செய்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும்.

☆ யுத்த அனர்த்தங்களால் மக்களுடைய வீடுகள், தளபாடங்கள் முதலான விலைமதித்தற்கரிய சொத்துக்கள் பெருமளவு அழிந்து இருக்கின்றன. இவற்றுக்கு நஷ்டஈடுகள் வழங்கப்படும் என்று ஆரவாரமாகக் கூறப்படுகின்றதேதவிர, அதிகமான மக்களுக்கு அந்த நஷ்டஈடு போய்ச்சேரவில்லை. சிலருக்கு மட்டும் கிள்ளித்தெளிக்கப்படுகின்றது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் போதிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

☆ சமாதானமான அரசியல் தீர்வுக்காக ஆர்வத்துடன் உழைக்கும் அரசையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், நோர்வே நாட்டையும் மகிழ்வுடன் பாராட்டுகின்றோம்.

☆ சர்வதேச நாடுகளே சமாதான முயற்சிக்கு தூபம்போடுவதோடு, நிதி உதவிகளும் வழங்கும் இவ்வேளையில், எமது நாட்டின் சகல சமூகங்களையும், சகல அரசியல் கட்சிகளையும் சமாதானத் தீர்வுக்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

# அரும்பொருள்கள் கடத்தப்படுவதற்கு துணைபோவது வரலாற்றுத் துரோகம்

## பல்கலை வரலாற்றுக் கழகம் தெரிவிப்பு

அரும்பொருள்கள் கடத்தப்படுவதற்குத் துணைபோவது வரலாற்றுத் துரோகமாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக்கழகம்.

இது குறித்து 'யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அரும்பொருள்களின் களவு எல்லைமீறும் அபாயம் - துணைபோவது தவிர்க்கப்படவேண்டும்' என்ற தலைப்பில் மேற்படி கழகம் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் புராதன விக்கிரகங்கள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இச்சம்பவங்கள் எமது தொன்மையையும், பண்பாட்டையும் பாதிக்கும் ஒரு செயலாகும்.

சில சுயநலமிகள் சுயலாபத்திற்காக மேற்கொள்ளும் களவு எமது பாரம்பரியத்தினை அழிப்பதாக அமைகிறது. தொல்பொருள் சின்னங்களாக விளங்கும் ஆலய விக்கிரகங்களைக் களவாடும் சம்பவங்கள் ஏ-9 பாதை திறப்பதற்கு முன்னர் வேறு மார்க்கமாகக் கடத்தப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

ஆனால், தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டபின் ஆலயங்களின் புராதன வழிபாட்டுச் சின்னங்கள் களவாடப்படும் சம்பவங்கள் சாதாரண விடயமாகிவிட்டன.

இது ஒரு தேசத்துரோகக் குற்றமாகும். இதில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டியது தமிழ்மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் அக்கறைகொண்ட அனைவரினதும் பாரிய கடமையாகும். இத்தகைய சமுதாயப் பொறுப்பற்ற சுயலாபம் கருதியோரின் செயற்பாட்டை உடனடியாகத் தடுக்க அனைவரும் விழிப்புடன் செயற்படவேண்டிய தருணம் இதுவாகும்.

அதிகாரமுடைய தரப்பினர் இவ்விடயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி அக்கறையுடன் செயற்படுமாறு வேண்டிக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

# பஸ்சேவை நேரத்தை மாற்றக் கோரிக்கை

மருதனார்மடம் சந்தியில் இருந்து மானிப்பாய்-தாவடியூடாக யாழ்ப்பாணம் செல்லும் 771ஆம் தடஇலக்கம் கொண்ட போக்குவரத்து பஸ்சேவையை, அலுவலக ஊழியர்களின் நன்மைகருதி மாலை 4.30மணிக்கு அல்லது 5.00மணிக்கு சேவையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள அரச அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நன்மைகருதி பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெற்றுவரும் இப்பஸ் சேவையை அரைமணி நேரமோ ஒருமணி நேரமோ தாமதித்து நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலர் த.தேவராஜன் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் கலந்துகொண்ட போக்குவரத்துசபைப் பிரதிநிதி பஸ் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக் கூறினார்.

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் தனியார் பஸ்கள் நிறுத்திவைக்கப்படுவதனால் வடபிராந்திய போக்குவரத்து சபைக்குரிய பஸ்களை நிறுத்தி வைப்பதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையிடம் கடிதம்மூலம் தெரிவிப்பதாக அங்கு கூறப்பட்டது.

புன்னாலைக்கட்டுவன் வீதியைத் திருத்துவது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோருவது என்றும் சபையில் தீர்மானிக்கப்பட்டது. (ஓ-152)

### நாளை

தை 29
புதன்கிழமை
(12.02.2003)
திதி : தசமி
காலை 7.33 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முன்னிரவு 10.03 வரை.
ஹஜ்ஜுப் பெருநாள்
சுபநேரம் : 5.04 - 6.34
ராகுகாலம் : 12.34 - 2.04
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மூன்றங்குல நாக்கு 6அடி மனிதனை கொன்று விடக் கூடாது.

# மேலும் 10 கிராமங்களுக்கு 24 மணிநேர மின் விநியோகம்

## அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு

மல்லாகம்,பெப்.11

குடாநாட்டில் மேலும் பத்துக் கிராமங்கள் அடுத்தமாதம் முதல் 24 மணிநேர மின் விநியோகத்தைப் பெறவுள்ளன.

இதுவரைகாலமும் குறிப்பிட்ட சில மணி நேரங்கள் மின் விநியோகத்தைப் பெற்றுவந்த இடங்களே இவ்வாறு 24 மணிநேர மின்விநியோகத்தைப் பெறவுள்ளன.

குப்பிளான், கரந்தன், நீர்வேலி, மாகியப்பிட்டி, நவாலி, ஆவரங்கால், வாதரவத்தை, நவக்கிரி, மாதகல், இளவாலை ஆகிய இடங்களே இவ்வாறு மின்விநியோகத்தைப் பெறவுள்ளன என சுன்னாகம் மின்நிலைய மின் அத்தியட்சகர் ஏ.நாகராசா தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மின் வழங்கல் நடவடிக்கையின்கீழ் இந்த விநியோகம் இடம்பெறவுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

இதேவேளை - மின்மானிகளில் குறைபாடுகள் உள்ளதாகக் கூறப்படும் முறைப்பாடுகளில் அனேகமானவற்றை ஏற்கமுடியாது. மின்மானிகள் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்ட பின்னரே பொருத்தப்படுகின்றன. பொதுமக்கள் மின்பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டும்.

மின்மானி பொருத்தப்படாத காலங்களில் உயர்வலு மின் குமிழ்களைப் பயன்படுத்தியவர்கள் இனிமேல் அவற்றைப் பாவிப்பதைத் தவிர்க்கவேண்டும் - என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி)

# ஆறாம் கட்ட பேச்சுக்கள் மார்ச் 18இல் ஜப்பானில்

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆறாம் கட்டப் பேச்சுக்கள் ஜப்பானில் அடுத்தமாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவிலிருந்து நூறு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஹக்கோன் (HAKONE) நகரில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும்.

இந்தப் பேச்சுக்கள் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் -

ஏழாம் கட்டப் பேச்சுக்கள் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி முதல் மே 2ஆம் திகதிவரை இடம்பெறும் என்றும் - பேர்ளின் நகரில் சனியன்று இடம்பெற்ற பேச்சின் இறுதியில் தெரிவிக்கப்பட்டது.

ஏழாம் கட்டப் பேச்சுக்கள் இடம்பெறும் இடம் குறித்து முடிவு செய்யப்படவில்லை. (எ-3)

உ
குகமயம்
விராட் விஸ்வப் பிரமனே நம!

## சிறப்பு பட்டமளிப்பு

பருத்தித்துறை தருமணல் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்திய பிரதமகுரு தாணு - வாசுதேவக்குருக்களுக்கும் உதவி குருமார்களுக்கும் தேவஸ்தான பரிபாலன சபையினர் 'கிரியா சிரம ஜோதி' என்னும் சிறப்பு பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்து குரு ஆசிபெற்று மகிழ்ந்தனர்.

(14332) - பரிபாலனசபை.

## நலியும் துயரில் நான்காவது ஆண்டு.....

விண்மகள் மடியில் 28 - 07 - 1967



இறைபத நிறைவில் 26 - 01 - 1999

செல்வி

### வைரமுத்து மனோரஞ்சினி (ரஞ்சி)

*திதி: 11.02.2003 - வளர்பிறை தசமி*

வான்பெறு உலகு தன்னை
வகை பெற நயந்து கொண்டு
ஊன் பெறு உடலை மாற்றி
ஒடிட உகுத்தோங் கண்ணீர்
தேன் பெறு மொழியி னாரே
திகழ் மனோ ரஞ்சினிக்கு
நான்கது மறைவின் ஆண்டே
நலிகின்றோம் நாளும் நாமே!

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, தம்பிமார், அண்ணி,
அத்தான், பெறாமக்கள்,
மருமக்கள்.

*தம்பு கடையடி,*
*சரசாலை மத்தி,*
*சாவகச்சேரி.*
(14066)

## பாடசாலை தனியார் கட்டடத்தில்

சாவகச்சேரி கச்சாய் வீதி, சக்தியம்மன் தமிழ் வித்தியாலயம் பாடசாலைக்கு அருகில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்குகிறது.

யுத்தத்தினால் சேதமடைந்த இந்த வித்தியாலயம் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் (ஜீரி.இசற்) தற்போது புனரமைக்கப்பட்டு வருவதையடுத்தே மேற்படி வித்தியாலயம் வீட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது. (எ-117)

## அல்லிப்பளை பாடசாலையை மீண்டும் இயக்க ஏற்பாடு

கடந்த 12 வருடங்களாக இயங்காமலுள்ள அல்லிப்பளை அ.த.க. பாடசாலையை மீண்டும் இயங்க வைக்க கிளிநொச்சி கல்வி வலயத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளாலிப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் அல்லிப்பளைப் பகுதியில் தங்கியுள்ளதால், தற்போது பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையுடன் இணைந்து இயங்கும் கிளாலி றோ.க.த.க. பாடசாலையை அல்லிப்பளை பாடசாலைக் கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## கடற்றொழிலாளருக்கு நிவாரணமுத்திரை

கிளாலிப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு விசேட நிவாரண முத்திரைகளை வழங்க பளைப் பிரதேச செயலர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்வின்போது கடற்றொழில் உபகரணங்களை கைவிட்ட நிலையில், மீண்டும் தொழில்களை ஆரம்பிக்க முடியாமல் பளைப் பகுதியில் தங்கியுள்ள இந்த மீனவர்களுக்கு விசேட நிவாரண முத்திரை வழங்க கிளிநொச்சி அரச அதிபரிடம் பளை பிரதேச செயலர் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளாலிப் பகுதியிலுள்ள வீடுகளை மக்கள் பார்வையிடவோ மீளக் குடியமரவோ இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-117)

யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கு

## ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்

(நாச்சிமார் கோயில்)

புனருத்தாரண வேலைகள் ஆரம்பம்:
காலம்: நாளை (12.02.2003) புதன்கிழமை.

இதனை புன்னாலைக்கட்டுவன் வடக்கு வாழ்மக்களுக்கு அறியத் தருகிறோம்.

இங்ஙனம்:
ஆதின கர்த்தாவும்,
அம்பிகை அடியார்களும்.

(14331)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1954 - 03 - 24



விண்ணில் 1999 - 02 - 11

திருமதி

### மரியா கேமின் சுலோசனா யோசவ்

உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன்
தம்முடன் என்றும் வாழ வைக்க
அழைத்துக் கொண்ட நான்காம் ஆண்டில்
ஆண்டவருடைய இரக்கத்தில்
உம் ஆன்மா சாந்தியடைய இகமதில் பிரார்த்திக்கும்

கணவர், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

*S.அல்போன்சஸ்,*
*பொந்தி ஒழுங்கை,*
*பண்டத்தரிப்பு.*
(14232)


## 11-02-2003 இதழில் சுடர் ஒளி




☆ உண்மை நிலை விளங்காத தரப்புக்களும்
நீதியின்றி நிகழ்ந்துவிட்ட துயரங்களும்
நெடுந்தீவுக் கடலில் நிகழ்ந்த சோகச் சம்பவம்

☆ அமைச்சர்களின் வடபகுதி விஜயமும்
புகைச்சல்களுக்கு மத்தியில் மக்களும்

☆ கிணறு வெட்டியபோது கனிர் சத்தம்
மூன்று அடி ஆழத்தில் திருவுருவங்கள்
திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை

☆ சுதந்திர தினத்தில் கறுப்புக் கொடி
உலகிற்கு உணர்த்தப்பட்ட உண்மைகள்

☆ கோபாலபுரத்தில் தூபி திறப்பிற்கு தடுப்பு
முகாமை அமைத்துவிட படையினர் துடிப்பு

☆ குற்றமாக சோடிக்கிற கதைகளை
முற்றுமாக நீக்கிவிட முடியுமா?

- தேரடி -

☆ யாரிடம் சொல்லி அழ

- நகைச்சுவை -

விலை 14/=

மற்றும் மதன் சித்திர
தொடர் கதை, சிறுகதை,
குறுங்கதை, விளையாட்டு, இணையத்
தளத்திலிருந்து, மசாலா மிக்ஸ், பித்தன்
பதில்கள், சினிமா உட்பட
பல்வேறு ஆக்கங்கள்.

(C-268452)

# கிளிநொச்சியில் ரூ.20 கோடி செலவில் புதிய தொழில்நுட்பக் கல்லூரி

## மூன்றாம் நிலைக்கல்வியமைச்சு ஆராய்கிறது

கொழும்பு,பெப்.11

கிளிநொச்சியில் 20கோடி ரூபா செலவில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை அமைப்பது குறித்து மூன்றாம நிலைக் கல்வியமைச்சு ஆலோசித்து வருகிறது. மட்டக்களப்பில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் அமைச்சர் கபீர் ஹாசீம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த சனியன்று மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றுகூடல மண்டபத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அமைச்சர் உரையாற்றினார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் கூறியதாவது:- இரு தசாப்தங்களுக்குப் பின்னர் இப்பொழுது நாட்டில் சமாதானம் ஏற்பட்டிருக்கிறது. இச்சூழ்நிலையில் கிளிநொச்சியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்து எனது அமைச்சு ஆலோசித்து வருகிறது.

எமது அரசு மூன்றாம் நிலைக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. அரசினால் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்கமுடியாது. எனவே, அவர்களது கல்வித்தரத்தை உயர்ததினால் அவர்களாக தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இன்று 10லட்சம் பேர் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். அவர்களில் 75சதவீதமானவர்கள் பணியாளர்களாகவே வேலை செய்கின்றனர். அவர்களின் கல்வித்தரம் உயர்ததப்படுமாயின் அவர்கள் வெளிநாடுகளில் நல்ல வேலைகளைப் பெற்றுக்கொளளலாம் - இவ்வாறு அமைச்சர் கூறினார்.

தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் எம்.குணரட்ணம் தலைமையில் நடைபெற்ற இநநிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நா.தங்கவடிவேல், ஞா.கிருஷ்ண பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)

# வவுனியாவில் கறுப்புக்கொடிகள் அறுக்கப்பட்டன

வவுனியா,பெப்.11

நெடுந்தீவுக் கடற்பரப்பில் இடம்பெற்ற துயரசம்பவத்தை நினைவு கூரு முகமாக வவுனியாவில் வெகுஜன அமைப்புகளின் ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த துக்க நிகழ்வுகளின் போது கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் பொலீஸாரால் அறுத்தெறியப்பட்டுள்ளன என - என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தை கண்டித்து யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

அறுத்தெறியப்பட்ட கறுப்புக் கொடிகளும் தோரணங்களும் உடனடியாகவே மீண்டும் அங்கு கட்டப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# மட்டு. இ.கி.மிஷன் மாணவர் இல்லம் நாடளாவிய தேர்வில் முதலிடம்

## தேசிய விருது வழங்கி கௌரவிப்பு

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட மாணவர் இல்லத் தெரிவில் மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மாணவ இல்லம் மிகச் சிறந்த இல்லமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை சமூக நலன்புரி அமைச்சின் சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைச் சேவைத் திணைக்களம் இத்தெரிவை நடத்தியது.

75 வருட பூர்த்தியை எய்தியுள்ள இச்சிறுவர் இல்லத்துக்கு பத்தாயிரம் ரூபா பணப் பரிசும், கேடயம், சான்றிதழ் என்பனவும் வழங்கப்பட்டன. அண்மையில் கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து இப் பரிசுகள் வழங்கப்பட்டன. (எ)

# மு.கா. செயற்பாட்டுக்குழு உறுப்பினர் புத்தளம் பகுதியில் தாக்கப்பட்டார்!

புத்தளம்,பெப்.11

மன்னார் மாவட்ட மக்கள் இடம்பெயர்ந்து வாழும் புத்தளம் எருக்கலம்பிட்டி மீள் குடியேற்றக் கிராமத்தில் கடந்த சனியன்று இடம்பெற்ற ஒரு தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் படுகாயத்துக்குள்ளாகி புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச சம்பவத்தில் முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாட்டுக் குழு உறுப்பினரான ஏ.ஜீநவாஸ்டீன் (35) என்பவரே காயத்துக்குள்ளானார்.

இவரைத் தாக்கியதாக மாற்றுக் குழு ஆதரவாளர் ஒருவருக்கு எதிராகப் புத்தளம் தள வைத்தியசாலைப் பொலீஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புத்தளம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏரத்நாயக்கா இது குறித்து விசாரணை நடத்திவருகின்றார். (எ)

# 'அக்ரஹாரா'வில் இணைந்த பலருக்கு இதுவரை பதிவு இலக்கம் இல்லை

## யாழ்.அரச ஊழியரின் பரிதாபம்

யாழ்ப்பாணம்,பெப்.11

'அக்ரஹாரா' காப்புறுதித் திட்டத்தில் இணைந்துகொண்ட யாழ்.அரச ஊழியர்கள் பலருக்கு அதற்குரிய பதிவு இலக்கங்கள் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊழியர்களின் சேமநலனைக் கருத்திற்கொண்டு அறிமுகம் செய்யப்பட்ட இந்தக் காப்புறுதித் திட்டத்துக்கென ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் மாதாந்தம் பதினொரு ரூபா செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக மேற்படி திட்டத்தில் இணைந்துகொண்ட யாழ்.அரச ஊழியர்கள் பலருக்கு ஐந்து வருடங்கள் கடந்தும் காப்புறுதிக்கான பதிவு இலக்கங்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் -

இதனால் குறித்த காப்புறுதித் திட்டத்தில் இருந்து எவ்விதமான உதவிகளையோ, கடன் திட்டங்களையோ தாம் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் -

அரச உத்தியோகத்தர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் பதிவு இலக்கங்கள் கிடைக்கப்பெறா நிலையிலும் அரச ஊழியர்கள் மாதாந்தம் தமக்குரிய கட்டணத்தை தத்தமது அலுவலகங்கள் மூலம் அனுப்பிவைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மனைவியைச் சுட்டுக் கொன்றுவிட்டு வர்த்தகர் தானும் சுட்டு தற்கொலை

## களுபோவில பகுதியில் சம்பவம்; பொலீஸ் விசாரணை

நுகேகொடை களுபோவில பகுதியைச் சேர்ந்த செல்வந்தரான ஒரு வர்த்தகர் தனது மனைவியைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு தானும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

கடந்த சனியன்று நடைபெற்ற இச்சம்பவம் குறித்து கொஹுவல பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

புவனேகலால் போகொட என்னும் 41 வயது வர்த்தகர் தனது 39 வயது மனைவியைச் சுட்டுக் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்திருக்கிறார் என பொலீஸார் தெரிவித்தனர்.

நவீன சந்தைகளுக்கு காய்கறிகள விநியோகிக்கும் வர்த்தகரான அவர், சனியன்று இரவு 9 மணியளவில் வீட்டுக்கு வந்தார் என்றும், இரவில் வீட்டுக்குள் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் எதுவும் கேட்கவில்லை என்றும் வீட்டில் கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியர் பொலீஸாரிடம் தெரிவித்திருக்கின்றார்.

ஆயினும், நேற்றுமுன்தினம் காலை அத்தம்பதிகள் இறந்து கிடந்ததைக் கண்டதாகவும் அவர் பொலீஸாரிடம் கூறியிருக்கிறார்.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் இவ்வர்த்தகரிடம் ஆடம்பர வாகனமொன்று சிலரால் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் குறித்து முறையிடப்பட்டிருப்பதாகவும் கொஹுவல பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து கொஹுவல பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தொகுதி மக்களைத் தவறாது சந்திக்க அமைச்சர்கள், எம்.பிக்களுக்குப் பணிப்பு

கொழும்பு,பெப்.11

சகல அமைச்சர்களும் ஒவ்வொரு வார இறுதியிலும் தமது தேர்தல் தொகுதிகளில் மக்களை சந்திக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்ற அமர்வுகள் இல்லாத நாள்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது தொகுதிகளில் கட்டாயம் இருக்கவேண்டும் என்றும் பிரதமர் கேட்டுள்ளார்.

ஐ.தே.கட்சி 2001ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடித்தபின் கட்சியைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்தே பிரதமர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

ஐ.தே.க.மாவட்ட பிரதேச அமைப்பாளர்களின் ஒன்றுகூடல்களும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து ஐ.தே.க.நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டும் மாபெரும் ஒன்றுகூடல் ஒன்றை நடத்துவதற்கு ஐ.தே.க. தலைமையகம் தீர்மானித்துள்ளது. (ஐ)

# ஓமந்தை முகாமில் சிப்பாய் சுட்டுக்கொலை

வவுனியா,பெப்.11

வவுனியா ஓமந்தை இராணுவ முகாமில் கடமையாற்றும் படைச் சிப்பாய் மற்றோர் இராணுவச் சிப்பாயை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார் எனக் கூறப்படுகின்றது. கே.எம்.பிரதீப் என்னும் வீரரே கொல்லப்பட்டவராவார். கடந்த சனியன்று அதிகாலை இராணுவ முகாமுக்குள்ளேயே இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது. சுட்டுக்கொன்றார் எனக்கூறப்படும் இராணுவ வீரர் ரி.56 ரக துப்பாக்கியுடன் வவுனியா பொலஸாரால் கைதுசெய்யப்பட்டார். இச்சம்பவத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.(ஐ)

# பிளாற்றில் இருந்து தவறிவீழ்ந்த சிறுவன் படுகாயம்!

யாழ்ப்பாணம்,பெப்.11

மேலே இருந்த விளையாட்டுப் பொருள் ஒன்றை எடுப்பதற்காக வீட்டுப் பிளாற்றில் ஏறிய சிறுவன் அதிலிருந்து தவறிவீழ்ந்து படுகாயமடைந்தான்.

குருநகரில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் தர்மதாஸ் கஜன் (வயது 13) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

# நூலகத்தில் பொறிக்க வேண்டிய இருவரது பெயர்கள்...

அரைகுறையாகப் புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை எதிர்வரும் பதினான்காம் திகதி திறந்து வைப்பதென யாழ்.மாநகர சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. வழமையாக மாநகரசபைக கூட்டங்களில் வித்தைகளில் ஈடுபடும் மாநகரசபை உறுப்பினர்களும், தீர்மானங்களைத் தீக்கிரையாக்கும் உறுப்பினர்களும் நூலகத திறப்பு விழா விடயத்தில் மட்டும் தமது ஒருமித்த ஆதரவை வழங்கி ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயம்.




கணனி மயப்படுத்தப்படப் போவதாகக் கூறப்பட்ட நூலகத்திற்கு கணனிகளே இன்னும் வந்து சேரவில்லை. நூலகத்திற்குரிய ஆளணி இன்னும் திறைசேரியால் அங்கீகரிக்கப்படவில்லை. எனினும் நூலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி நூலகத்தைத் திறந்துவைப்பதையிட்டு ஒவ்வொரு யாழ்ப்பாணத் தமிழனும் பெருமைப்பட வேண்டும். சிங்களப் பேரினவாதிகளால் நூலகம் திறந்து வைக்கப்படாமல் தமிழர்களின் தலைவரால் திறக்கப்படுவது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

தமிழ் மக்கள் மீது அக்கறையும் அபிமானமும் கொண்ட மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா இனவாத, ஐக்கிய தேசியக் கட்சியால் சாம்பலாக்கப்பட்ட நூலகத்தைக் கட்டியெழுப்பி தமிழ் மக்களுக்கு வழங்குவதற்காக இரவு பகலாகப் பாடுபட்டு வந்தார். மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாண மக்களுக்காக தற்காலிகமாகவேனும் ஒரு நூலகத்தை உடனடியாக வழங்க விரும்பினார். அதற்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கட்டடத்தில் தற்காலிக நூலகமொன்றைத் தனது அரசில் முக்கிய அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவை அனுப்பி திறந்து வைத்தார். இந்தத் திறப்பு விழா வைபவத்தில் கலந்துகொள்ளவேண்டாம் என நூலகருக்கும் அப்போதைய ஆணையாளருக்கும் மிரட்டல் கடிதம் வந்தது. இதனால் நூலக உத்தியோகத்தர்களும், மாநகர சபை உத்தியோகத்தர்களும் உயிரைக் கையில் பிடித்தவாறே திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.

இன்று நிலைமை அன்றுபோல் இல்லை. நாட்டில் சமாதானக் காற்று வீசுகிறது. யாழ்.நகர மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாநகரசபை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்துடன், நீண்டகாலமாக தமிழருக்காக அல்லும் பகலும் உழைத்துவரும் தமிழர்களின் தலைவர் நூலகத்தைத் திறந்து வைக்கவுள்ளார். எனவே, யாழ்ப்பாண மக்கள் அனைவரும் திறப்புவிழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும்.

**அரசகேசரி**

குறித்த தினத்தில் நூலகம் திறக்கப்பட வேண்டியதும் மிகமிக அவசியம். ஏனெனில் இம்மாதம் பதினேழாம் திகதியுடன் யாழ்மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலம் முடிவடைகிறது. உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் முடிந்தால் சிலவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தாம் முன்பு செய்த பிழைக்குப் பிராயச்சித்தம் தேடும் முகமாக பிரதமரோ அல்லது வேறு அமைச்சர்களோ நூலகத்தைத் திறந்து வைத்தால் என்ன செய்வது? எனவே, இம்மாதம் பதினேழாம் திகதிக்கு முன்னர் கட்டாயம் நூலகம் திறக்கப்பட வேண்டும்.

நூலகத்திறப்பு விழா அன்று வீடியோ எடுப்பதற்காக இடைக்கால நூலகத்திலிருந்து ஒரு தொகுதி நூல்கள் எடுத்துவரப்படவுள்ளன. ஒரு நூலகத்தின் சிறப்பு அந்த நூலகத்தின் நூல்களிலேயே தங்கியுள்ளது. கட்டடத்தில் அல்ல என்பது மாண்புமிகு முதல்வருக்கும் உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும். எனவே தான் திறப்புவிழா அன்று நூலகத்தில ஒரு பகுதியில் நூல்களைக் காட்சிப்படுத்திவிட்டு திறப்புவிழா முடிந்த மறுநாள் நூல்களைத் திரும்பவும் எடுத்துச் செல்வதென மாநகரசபை தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

யாழ்ப்பாண நூலகத்திற்கு தாவீது அடிகளாரின் பெயர் சூட்டப்பட வேண்டும் என அனற்கூடர் என்பவர் உதயனில் எழுதியிருந்தார். தாவீது அடிகளை விடவும் நூலகத்தை உருவாக்குவதில் முன்னணியில் நின்று உழைத்தவர்கள் இருவர்.

ஒருவர் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த வில்லியம் துரைவணம். இவர் தான் யாழ்ப்பாணத்தில் நூலகத்தை உருவாக்கியவர். 841ஆம் ஆண்டு. இதன் பின்னர் அச்சுவேலி செல்லப்பா, யாழ்ப்பாணம் மத்திய வாசிகசாலை என்ற பெயரில் துண்டுப் பிரசுரம் அச்சிட்டு விநியோகித்து நிதி சேகரித்து நூலகத்தை உருவாக்கியவர்.

இவர்களது படங்களோ பெயர்களோ நூலகத்தின் எப்பகுதியிலும் காணப்படவில்லை.

மாண்புமிகு முதல்வரின் பெயரும் கௌரவ உறுப்பினர்களானவரினதும் பெயரும் மட்டுமே கல்லில் பொறிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதல்வரினதும் கௌரவ உறுப்பினர்களினதும் பெயர்கள் கட்டாயம் நூலகத்தில் பொறிக்கப்படவேண்டும்.

தற்போது பதவியிலுள்ள முதல்வரும் உறுப்பினர்களும் நூலகத்திற்காக உழைத்ததுபோல் இதுவரை எவரும் நூலகத்திற்குச் சேவையாற்றவில்லை.

யாழ்ப்பாண நூலகத்திற்கென வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நிதியை ஜனாதிபதி வேறு நூலகங்களுக்கும் பயன்படுத்த முனைந்த போது அதனைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி (ஜனாதிபதியின் ஆதரவுக் கட்சிகளும் இணைந்து) முழு நிதியையும் யாழ்.நூலகத்திற்கு பெற்றுக்கொடுத்தது தற்போது பதவியிலுள்ள சபையே.

யாழ்ப்பாண நூலகத்திற்கென ஜனாதிபதி சேகரித்த செங்கட்டிகளையும், நூல்களையும் மாநகர சபை உழவு இயந்திரத்தில் தாமே நேரடியாகச் சென்று எடுத்துவந்தவர்களும் முதல்வரும் உறுப்பினர்களும் தான். அத்துடன் கட்டட வேலைகளை அடிக்கடி சென்று பார்வையிட்டு வருபவர்களும் உறுப்பினர்களும் முதல்வருமே.

எனவே, அவர்களது பெயர்கள் கட்டாயம் பொறிக்கப்படவேண்டும். எங்காவது, ஒரு மூலையிலாவது இந்த நூலகம் இத்தனையாம் திகதி இன்ன அரசின் ஆட்சிக்காலத்தில் அரச படைகளால் தீக்கிரையாக்கப்பட்டது என ஒரு நடுகல் நட்டால் அது காலங்காலமாக நூலகத்தின் வரலாற்றைப் பறைசாற்றிக்கொண்டிருக்கும். ஆனால், இது என்ன உலகம் அறியாத விடயமா? உலகம் முழுவதும் அறிந்த விடயந்தானே ஏன் வீணாக ரணில் அரசுடன் கோபித்துக்கொள்ள வேண்டும். பிறகு பிரதமரும் அரசும் சிலவேளை இதற்காக வருத்தப்படக் கூடும். ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டார்கள், மீன் தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள் மற்றும் Love Birds குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (14341)

## வீடு விற்பனைக்கு

மயிலங்காடு றோட், பெரிய சங்கம் அருகில் 7 பரப்புக் காணி 2 வீடுகளும் 2 கிணறுகளும் உட்பட விற்பனைக்குண்டு. தொடர்பு: க.யோகலிங்கம் (மில் உரிமையாளர்), ஸ்ரேசன் றோட், மல்லாகம். (14334)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் 5பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 244, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.No. 222 2525 (14308)

## தவறிவிட்டன

நாராந்தனை வடக்கு, தம்பாட்டி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கார்த்தியேசு தம்பிராசா என்பவரின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை (இல.0905007476), கடற்படை அடையாள அட்டை என்பன 04.02.2003 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (14344)

## நாடகம்

இலங்கை வானொலி நாடகங்கள, நகைச்சுவைக் கதம்பம் (யாழ்ப்பாண பேச்சு வழக்கில்), திண்ணைப் பேச்சு முதலியன கேட்டீர்களா? இரு நாடகங்கள் கொண்ட கசெற் ரூ150/- M.மாசிலாமணி, வன்னியசிங்கம் வீதி, தாவடி.T.P.222 3527. (14340)

## கல்வி

கணனி தட்டெழுத்து (விசைப் பலகை வேகம் Ms Word உட்பட) 60 மணித்தியால செய்முறை வகுப்புகளுக்கு 800 ரூபா. தொடர்பு: 37(149), சிவன் பண்ணைவீதி (வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அண்மையில்), யாழ்ப்பாணம். (13435)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வங்கியில் கௌரவ பதவியில் கடமையாற்றும், 38 வயதுடைய, செவ்வாய் தோஷமற்ற, 27 கிரகபாவம் உள்ள மணமகனுக்கு மெல்லி தோற்றமுள்ள, பண்புள்ள, அழகிய, குடும்பப் பாங்கான மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு குடும்பவிவரங்களுடன் தொடர்பு: விளம்பர இல.1777, C/o உதயன். (14337)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, 28 கிரகபாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்கு தகுந்த மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல.1776C/o உதயன். (14338)

## தமிழ் தட்டச்சாளர் தேவை

உரும்பிராயில் அல்லது திருநெல்வேலியிலுள்ள அலுவலகத்தில் சேவையாற்ற தமிழ் தட்டச்சு அனுபவம் மிக்க ஒருவர் தேவை.

தொடர்பு:
க.சிவசுப்பிரமணியம்
(சட்டத்தரணி)
மானிப்பாய் வீதி,
உரும்பிராய். (14348)

## D.சேனாதிராஜா அன் சன்ஸ்

43ஆம் வருட சேவை

- கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குமிடம்
- பல் கட்டுமிடம்
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்

அனைத்தும் மிகக்குறைந்த விலைகளில்

உங்கள் கண்களை தானம் செய்யுங்கள்
உங்களுக்கு பின் உங்கள் பொன்னான கண்கள்
இன்னுமொரு ஜீவனுக்கு பயன்படட்டும்

இல.18A, யாழ்:பஸ் நிலையம்
(பஸ் நிலையத்தில் கிழக்குப் பக்கமாக உள்ள கடைகள் வரிசையில்)
யாழ்ப்பாணம்.

T.P. 071-338088 (14343) உரிமையாளர்: சே.ஆனந்தராஜா.

## பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் கைதடியில் அழிப்பு

கைதடி,பெப்.11.

கைதடியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்றிலிருந்து பாவனைக்குதவாத பிஸ்கற் மற்றும் குழந்தைகளுக்கான உணவு வகைகள் என்பன கைதடிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைக் கொண்ட குழுவினரால் கடந்த மாதம கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. (ஒ-75)

## கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

கைதடி,பெப்.11

தென்மராட்சி மதுவரித் திணைக்களத்தினால் கடந்த மூன்றாம் திகதி நாவற்குழி மற்றும் மட்டுவில் மானாவளைப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கசிப்பு உற்பத்திச் சாதனங்களும் கசிப்பும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவர் தப்பி ஓட மற்றொருவர் அகப்பட்டார். தற்போது அவர் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - கைதடி வடக்கில உள்ள ஒரு வீட்டில் இருந்து சட்ட விரோதமாக விற்பதற்கு வைக்கப்பட்டிருந்த 16போத்தல் கள்ளும் மதுவரிப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டது. கள் வைத்திருந்தவர் மீதும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-75)

## சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து)

தற்காலிக அமைய அடிப்படையிலான பாரவூர்தி சாரதிக்கான

## விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் எமது சங்கத்தினால் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் தங்களது சாரதிய அனுபவம், தகுதி பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து 18.02.2003ஆம் திகதிக்கு முன்பு "பொது முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

(c26456) - தலைவர்.



## அமரர் கந்தையா சத்தியசீலன்

(சத்தி)
(முன்னாள் மானிப்பாய் ப.நோ.கூ.ச.எ.வி.முகாமையாளர்)
அவர்களின்

## முதலாம் ஆண்டு நினைவாக

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலமைந்துள்ள

## பேருந்து தரிப்பு நிலைய திறப்பு விழாவும் விளையாட்டு விழாவும்

**காலம் : 15.03.2003 சனிக்கிழமை**

### போட்டிகள்

காலை 6.00 மணியளவில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

1. மரதன் ஓட்டப் போட்டி
2. சைக்கிள் ஓட்டப் போட்டி

மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றியோர்களுக்கு பரிசில்கள்.

1 ஆம் பரிசு தங்கப்பதக்கம்
2 ஆம் பரிசு 2,500 ரூபா
3 ஆம் பரிசு 1,250 ரூபா
10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குபற்றியோர்களுக்கு பரிசில்கள்

1 ஆம் பரிசு புதிய லுமாலா சைக்கிள்
2 ஆம் பரிசு 3,000 ரூபா
3 ஆம் பரிசு 1,500 ரூபா
10ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

அன்று மாலை 3.00மணியளவில் மேற்படி இடத்தில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் திறந்து வைக்கப்படும்.

### நிகழ்ச்சிகள்

1. மங்கள விளக்கேற்றல்
2. தேவாரம்
3. பேருந்து நிலையம் திறந்து வைக்கப்படும்
4. அன்னாரைப் பற்றிய குறிப்புக்கள்
5. கவியரங்கும் இடம்பெறும்

போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 15.03.2003 அன்று காலை 6.00மணிக்கு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து விளையாட்டுக்களில் பங்குபற்றலாம்.

இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி தெற்கு, மானிப்பாய். (14345) - குடும்பத்தினர்.



உடுவில் பரதகலா நிவேதன் நாட்டியாலயம் அளிக்கும்
திருமதி நந்தினி சிவராஜன் அவர்களின் மாணவி

## செல்வி சோபனா நந்தகுமார்

அவர்களின்

## பரத நாட்டிய அரங்கேற்றம்

*தலைவர்:* கலாரத்னா ந.வீரமணிஐயர் M.A.

*பிரதமவிருந்தினர்கள்:* பேராசிரியர் அ.சண்முகதாஸ்
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

*சிறப்பு விருந்தினர்கள்:*
நாடக கலாவித்தகர் திருமதி கோகிலா மகேந்திரன்
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் *அதிபர்*
திருமதி சாந்தினி சிவநேசன் *விரிவுரையாளர*

*அன்புடன் அழைக்கின்றோம்.*

திரு. திருமதி பொ.நந்தகுமார்
*"அருளகம்",*
*உடுவில் கிழக்கு.*

(14315)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி தே.திருவாதவூரா அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் ச.முத்துக்குமார்

அவர்கள் 08-02-2003ஆம் திகதி இயற்கை எய்தியமையையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அராலி இந்துக்கல்லூரி.

(14358)

உ
ஸ்ரீ விநாயகர் துணை

## விவாஹ சோபன சுபமுகூர்த்த அழைப்பு

சுவஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களரமான சித்திரபானு வருஷம் தை மாதம் 29ஆம் நாள் (12.02.2003) புதன்கிழமையும் ஏகாதசி திதியும் மிருகசீரிட நட்சத்திரமும் வைதலிய யோகமும் கூடிய காலை 8.30 மணி தொடக்கம் 10.01 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தவேளையில்,

வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் தேவஸ்தானம்
சுப்பிரமணியஐயர் - கமலாம்பிகை அம்மாவின் பேரனும்
சண்முகநாதசர்மா - கலாமணி
தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனுமான
**மயூரசர்மா (மயூரன்)**
(வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், நயினாதீவு)

ஸ்ரீ மீனாட்சி சோமசுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானம் உடுவில்
பிரம்மஸ்ரீ சிவகடாட்சக் குருக்கள் - விசாலாட்சி அம்மாவின் பௌத்திரியும்
பாலசுப்பிரமணியக்குருக்கள் - பிரேமராணி
தம்பதியினரின் சிமந்த புத்திரி சௌபாக்கியவதி
**மங்களகௌரி (கௌரி)**

ஆகிய இருவருக்கும் கன்னிகாதான - பாணிக்கிரகண திருமாங்கல்யதாரணம் செய்ய விநாயகர் திருவருளும், அம்பிகை திருவருளும், காஞ்சிகாமகோடி பெரியாரின் ஆசியோடும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வர ஆலய மண்டபத்தில் நடைபெறும் சுபமுகூர்த்தத்தில் தாங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: சித்தன்கேணி சிவன்கோயில் வீதியிலுள்ள எமது இல்லத்தில் காலை 6.00 மணிக்கு நடைபெறும்.

மாலை 3 மணிக்கு வரவேற்பு உபசாரம் நடைபெறும் (மணமகன் இல்லம், சித்தன்கேணி).

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

சண்முகநாதசர்மா - கலாமணி தம்பதியினர்.
*வள்ளக்குளம் வீரகத்தி விநாயகர் கோயில்,*
*மறவன்புலோ, சாவகச்சேரி.*
*தற்காலிக முகவரி: சிவன்கோயில் முன்பாக, சித்தன்கேணி.*

பாலசுப்பிரமணியக் குருக்கள் - பிரேமராணி தம்பதியினர்.
*மீனாட்சி அம்மன் கோயில், உடுவில்.*

*மணமகன் இல்ல வரவேற்பாளர்கள்:*
சிவஸ்ரீ ஜெ.சிவகுமாரசர்மா - தாரணி குடும்பம், கல்வியங்காடு.
சிவஸ்ரீ கு.சுந்தரசர்மா - திருவேணி குடும்பம், வவுனியா.

(14346)

## மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா ஆறுமுகம்

யாழ்ப்பாணம், குப்பிளானைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கை வசிப்பிடமாகவும், தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி இராசம்மா ஆறுமுகம் அவர்கள் 09.02.2003இல் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சிவகுரு - தங்கமுத்து தம்பதிகளின் மருமகளும் பண்டிதர் சிவகுரு ஆறுமுகம் (இளைப்பாறிய அதிபர், நாமகள் வித்தியாலயம்) அவர்களின் அன்புத் துணைவியாரும் ஜெயலக்ஷ்மி, ஜெயபாலச்சந்திரன் (பொறியியலாளர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம், *K.K.S.*), ஜெயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீகாந்தன் (இளைப்பாறிய முகாமையாளர், வாழைச்சேனை காகித ஆலை), உஷா, பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் அனித்தா, சுமித்திரா, லாவண்யா, சுவர்ணா, சுதர்சனா, சமித்தா, நிஷாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2003) புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொறல்லை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

475/6, ELVITIGALA MAWATHA,
NARAHENPITA,
COLOMBO - 05.
T.P. : 598755

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C26445)

# போசாக்கான பொன்னாங்காணிகூட கிருமிநாசினி பாவனையால் விஷமாகிறது

வலிகாமம் தென்மேற்கு பிரதேசம் விவசாயம் மற்றும் மரக்கறி செய்கைக்கு பெயர்போன இடமாக அண்மைக் காலத்தில் மாற்றமடைந்து வருகிறது.

தென்னிலங்கையில் இருந்து வருகைதரும் அரசியல்வாதிகளாயினும் சரி, அதிகாரிகளாயினும் சரி, விவசாயிகள் மற்றும் பொதுமக்களாயினும் சரி இப்பிரதேசத்துக்கு வருகை தராமல் திரும்பிச் சென்றது கிடையாது.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினருடன் தொடர்புகொண்டு இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், நெற்செய்கை, மரக்கறிச்செய்கை போன்றவற்றின் தன்மைகளை அறிந்து கொள்வதில் அவர்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பயிர்ச்செய்கைகளின் வனப்பையும், அழகையும் கண்டு மகிழ்வதுடன், பயிர்ச்செய்கை முறைகளைப பற்றி ஆவலுடன் விசாரித்து அறிந்து கொள்கின்றனர். பொன்னாங்காணி, வல்லாரை போன்றவற்றின் துண்டங்களைத் தமது வீடுகளில் வளர்ப்பதற்காக பெற்றுச் செல்கின்றனர்.

கீரை வகைகள் எமது உடலுக்கு போஷாக்கைத்தர வல்லன. இரசாயனக் கலவைப் பாவனையற்ற கீரைகளே ஆரோக்கியமானவை. வீடுகளில நாம் அவற்றைக் கொட்டுமுறை பயிர்ச செய்கையாக பூஞ்சாடிகளிலோ, உரப் பைகளிலோ நட்டு வளர்த்தும் பயன் பெறலாம்.

மானிப்பாய் மேற்கில் நவாலி, அட்டகிரி போன்ற இடங்களில் பொன்னாங்காணி, வல்லாரை, கங்குண்கீரை வகைகள் அமோகமாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. வியாபார நோக்கத்துக்காக செய்கை பண்ணப்படும் இவற்றுள் பொன்னாங்காணியே கூடுதலாகப் பயிரிடப்படுகின்றது. கடந்த இரண்டு ஆண்டு காலத்துக்குள்தான் இதன் முன்னேற்றம் தெரியவந்துள்ளது.

இப்பகுதி விவசாயிகள் இக்கீரை வகைகளை அழியவிடாது வருடம் முழுவதும் பாதுகாத்து வருகின்றனர். பெரும்போக நெற்செய்கைக் காலத்தில் இவற்றை மேட்டு நிலங்களில் நட்டுப் பாதுகாத்து அறுவடையின் பின் மீண்டும் வயல்களில் நட்டுப் பயிர் செய்கின்றனர். சுமார் 25 முதல் 30 வரையான ஹெக்டேயர் நிலத்தில் (50 ஏக்கர்) இப்பயிர்கள் செய்கை பண்ணப்படுகின்றன.

வியாபார நோக்கத்துடன் செய்கை பண்ணப்படும் பொன்னாங்காணி, வல லாரை கீரைகளுக்கு அதன் விளைச்சலை அதிகரிப்பதற்காக செய்கையாளர்கள் மேலதிகமான இரசாயனக் கலவைகளையும், செறிவு கூடிய கிருமிநாசினிகளையும் பயன்படுத்துவதுடன் அவற்றின் நச்சுத்தன்மை அழிவடைய முன்னர் சந்தைக்கு கொண்டு வருகின்றனர்.

உடலுக்கு ஆரோக்கியத்தையும், போஷாக்கையும் தரும் கீரைவகைகள், அதன் செய்கையாளர்களின் தவறான செயல்களினால் உயிருக்கே தீங்கு விளைவிக்கக்கூடிய அபாயநிலை தோன்றியிருப்பதாகப் பலரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

பொன்னாங்காணியின் செய்முறை, சந்தைப்படுத்தல், உபயோகம் என்பனபற்றி மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த விவசாயி நடேசு கணேசு பின்வருமாறு கூறுகின்றார்:-

மருதனார்மடம் சந்தையில் தேடுவாரற்றுக் கிடந்த ஒரு பிடி பொன்னாங்காணியை 1982களில் பொன்னையா சிவலிங்கம் என்ற விவசாயி எடுத்து வந்து தமது வயலில் பயிரிட்டார். அதன பிரயோசனம் அப்போது அதிகம் விளங்கவில்லை.

மிளகாய் செய்கையில் ஈடுபட்ட எமக்கு அதில் போதிய வருமானம் கிடைக்காமையால் - விரக்திமனப்பான்மையால் - பொன்னாங்காணியைப் பயிரிட்டோம். பரீட்சார்த்தமாக 500 கண்டுகளை நான் பயிரிட்டபோது, விவசாய நிலம் பாதிப்படையப் போகிறது என என்னைப் பலரும் ஏசினர்.

அவற்றை சகித்து, பொன்னாங்காணியைச் செய்கைபண்ணி மருதனார்மடம் சந்தையில் ஒரு பிடி கீரை 5 சதத்துக்கு விற்க முனைந்தபோது எவரும் அதை விரும்பி வாங்க முன்வரவில்லை. என்னை நையாண்டிப் பார்வை பார்த்தனர். நானும் தெரிந்தவர்களுக்கெல்லாம் இலவசமாக வழங்கினேன்.

ஒரு முறை வைத்தியர் ஒருவர் என்னைச் சந்தையில் சந்தித்து எண்ணெய் காய்ச்ச சிறந்தது என்று கூறி முழுக் கீரையையும் பெற்றதுடன், தொடர்ந்து வழங்குமாறும் கேட்டார். தென்பகுதியில் பொன்னாங்காணி வாய்க்கால்களில் விளைவதால் சுத்தம் கருதி என்னிடம் வந்து அதிக விலை கொடுத்து வாங்கினார். தொடர்ந்து 'ஆடரும்' (ORDER) கிடைததது.

அப்போதெல்லாம் 15 நாளுக்கு ஒருமுறை மட்டும் கிருமிநாசினியை சிறியளவில் அடித்தோம். 5 பரப்புக் காணிக்கு 30 லீற்றர் கிருமிநாசினியும், 10 கிலோ உரமும் பாவித்தோம். இதனால், அதன் விளைச்சலும் அதிகரித்தது.

ஒருமுறை நான் பொன்னாங்காணியை செய்கை பண்ணி, 11 மாதங்கள் - மாதம் ஒரு முறையாக அறுவடை செய்து சந்தைப்படுத்தியுள்ளேன். சராசரியாக 30 நாள்களுக்கு ஒருமுறை அறுவடை செய்தேன். 5 பரப்பில் விளைந்த கீரைகளை ஒரு ரூபா வீதம் விற்று 5 ஆயிரம் ரூபா சம்பாதித்தேன். வருடம் நிகரலாபமாக 3 ஆயிரம் ரூபா கிடைத்தது.

**வி.பி.சர்மா**
**வலி.தெற்கு செய்தியாளர்**

எனது இந்த வருமானம் ஏனைய விவசாயிகள் மத்தியில் போட்டி மனப்பான்மையை உருவாக்கியது. அவர்கள் 5 பரப்புக்கு 150 லீற்றர் கிருமி நாசினியையும் 50 கிலோ உரத்தையும் பாவிக்கத் தொடங்கினர். விவசாயத் திணைக்களத்தின் அறிவிப்பு அளவுக்கு மேலதிகமாக இவற்றைப் பாவித்தனர். மருந்து அடித்த மறுநாளே அவற்றைச் சந்தைக்குக் கொண்டு சென்றனர் - என்றார்.

அதிகளவு மருந்து பாவனையால நிலம், பயிர்வகைகள் பழுதடைகின்றன. நிலத்தில் உவர்த்தன்மை ஏற்பட்டு பயிர்கள் வேர் ஓடி முளைக்க முடியாது போகிறது. நல்ல நிலையில் இருந்த விவசாய நிலங்கள் பழுதடைந்துவிட்டன. தண்ணீர் உப்புத் தன்மையாக மாறுகின்றது. இவை மனித உடலில் செறிவதால் கொஞ்சம் கொஞ்சமாக நரம்புகளைத் தாக்கிப் பல நோய்களையும், மரணத்தையும் ஏற்படுத்துகிறது.

விவசாயிகள் இரசாயனகலவை, கிருமிநாசினிகளை பாவிப்பதை கைவிட்டு, இயற்கைப் பசளைகளை, பஞ்ச கௌவியம் கலந்த கிருமிநாசினிகள், உள்ளிக் கரைசல், வேப்பம் கரைசல போன்றவற்றைப் பயன்படுத்தவேண்டும்.

இரசாயன மருந்துப் பாவனையால் விவசாயிகளுக்கு நன்மை செய்யும் தும்பி, ஆமைநண்டு, வெட்டுக்கிளி, குளவி போன்ற பூச்சிகள் அழிந்து போகின்றன. மருந்து அடித்த நிலத்தில் செத்துக்கிடந்த புளுக்களை சாப்பிட்டு ஒரே நாளில் 40 மைனாக்கள் இறந்த சம்பவமும் நடைபெற்றுள்ளது.

கமநல சேவை திணைக்களத்தின் அறிவுறுத்தல்படி மருந்து அடிக்க வேண்டும். தொடுநஞ்சு (மஞ்சள் லேபல்) அடித்து 24 மணி நேரத்தின் பின் பயன்படுத்தலாம். ஆனால், ஊடுருவு நஞ்சு (சிவப்பு லேபல்), அடித்து கண்டிப்பாக 15 நாள்களின் பின்பே பயன்படுத்த வேண்டும்.

அதிகரித்த இரசாயன மருந்து பாவனை மற்றும் பொன்னாங்காணி செய்கை பற்றி கீரிமலை கமநல சேவை நிலைய பயிர்ச் செய்கை உத்தியோகத்தரிடம் கேட்டபோது, அவர் பின்வருமாறு கருத்து வெளியிட்டார்.

எமது அறிவிப்புக்களை கவனத்தில் எடுக்காமல் உரம் போடுகிறார்கள். நெல்லுக்காக சிபாரிசு செய்த பசளையை மரக்கறிப் பயிர்களுக்கு பயன்படுத்துகின்றார்கள்.

நாம் நடத்தும் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகளில் எல்லாம் பயிர்களுக்குப் போட வேண்டிய பசளை, கிருமிநாசினிகளின் அளவு முறைகளை கூறிவருகிறோம்.

அதிகரித்த இரசாயன கலவை பாவனையால் மேலதிக செலவு ஏற்படுகிறது. நிலம் உவர்த்தன்மையடைகிறது. இரசாயன உரம் பயிர்களின் இலைகளையும், செடிகளையும் செளிப்பாக - பச்சையாக - வைத்திருக்குமே தவிர மணிகளை தரமானவையாக்கமாட்டா. பூச்சித் தாக்கம் அதிகரிக்கும். இரசாயனம் கலந்த நீர் நச்சுத் தன்மை கொண்டதாகமாறும்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்த உரப் பாவனையால் மக்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவும், நோயாளிகளைப் பராமரிக்கவும் என கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஒரு தனிப்பிரிவே ஒதுக்கப்பட்டுள்ளது. பச்சையாக சாப்பிடும் வல்லாரை போன்ற கீரைவகைகளுக்கு இரசாயன கலவை பாவிப்பதால் உடலுக்கு நேரடியாகவே நஞ்சு கலக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மருந்து அடித்து இரண்டு வாரத்தின் பின்னரே அவற்றைச் சந்தைப்படுத்த வேண்டும் - என்றார்.

பொன்னாங்காணிக்குச் சந்தை மானம் இருப்பதால் அதைப் பயிரிடுவதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. யுனிசெவ் நிறுவன உதவியுடன் கமத்தொழில் திணைக்களத்தினரால் பாடசாலைத் தோட்டங்களிலும் இதைப் பயிரிட ஊக்குவிக்கப்படுகிறது.

சுத்தமான பொன்னாங்காணி, வல்லாரைகளை நாம் பெற எமது வீட்டுத் தோட்டங்களில் பூஞ்சாடிகளில், உரைப்பைகளில் இவற்றை நட்டுப் பயன்படுத்தலாம்.

நாம் எமது இளம் சந்ததியினரை பாதுகாக்க வேண்டும். விவசாயிகள் கடைப்பிடித்துவரும் அதிகரித்த இரசாயனப் பாவனை எமது சமூகத்துக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்.

பொன்னாங்காணி, வல்லாரை போன்றவற்றுக்கு நல்ல சந்தை வாய்ப்பு இருந்தபோதிலும், இரசாயனக் கலவை, கிருமிநாசினி என்பவற்றை அதிகளவில் பாவிப்பதால் மக்களுக்கு அவை தெரியவந்து ஒருவரும் அவற்றை வாங்க முன்வருகிறார்கள் இல்லை என்பதே தற்போதைய நிலை. ★

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# உருளைக்கிழங்கை பீடிக்கும் நோய்களும், நிவாரணமும்

**யாழ். குடாநாட்டில் தற்பொழுது உருளைக்கிழங்கு அறுவடை மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. இதன் காரணமாகக் குடாநாட்டுச் சந்தைகளில் கிழங்கின் விலை தாராளமாகக் குறைந்துள்ளது. கடந்த காலங்களில் எழுபது, எண்பது ரூபாவுக்கு விற்கப்பட்டுவந்த கிழங்கு இப்பொழுது 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவருகிறது.**

**இந்நிலையில், உருளைக்கிழங்கில் ஏற்படும் நோய்களும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது ஆகியன பற்றி இந்தவாரம் 'கமமும் புலமும்' பகுதியில் தருகிறோம்.**

செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிக்கு அதிக வருமானத்தைக் கொடுக்கக் கூடிய பயிர்களில் ஒன்றாக இருந்த உருளைக்கிழங்கு தற்பொழுது அதிக வருமானத்தைக் கொடுக்காத பயிர்களுடன் சேர்ந்து கொண்டுவிட்டது. அதற்குப் பல காரணங்கள் இருந்தும் அது குறித்து ஆராய்வதை விடுத்து, மேற்குறிப்பிட்ட விடயம் பற்றிப் பார்ப்போம்.

நடுகைக்குப் பெறப்படுகின்ற விதை கிழங்குகள் மிகவும் தரம்வாய்ந்தவையாக இருக்கவேண்டும். இவை நோய்த்தாக்கம் உடையனவாகவோ அல்லது நோய்த்தாக்கம் ஏற்பட்ட தோட்டங்களில் இருந்து பெறப்பட்டவையாகவோ இருக்கக்கூடாது. தாக்கம் ஏற்பட்டிருந்தால் அவை தரமான விதை கிழங்குகளாக இருக்கமுடியாது. இதனால், விவசாய இரசாயன மருந்து வகைகளைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். அதற்குப் பெரும் பணச் செலவும் ஏற்படும்.

இவற்றைத் தவிர்த்துத் தரமான விதை கிழங்குகளைத் தெரிவுசெய்து செய்கையில் ஈடுபட்டாலும், பயிரில் பல்வேறு நோய்கள் ஏற்படக்கூடும். பிற்கூற்று வெளிறல் நோய், முற்கூற்று வெளிறல் நோய், வாடல் நோய், கறுப்புக்கால் நோய் மற்றும் வைரசு நோய்களும் ஏற்படும்.

முதலில் குறிப்பிட்ட பிற்கூற்று வெளிறல் நோயானது, பயிரில் ஏற்பட்டால் இலையின் ஓரங்கள் எரிந்ததுபோன்று காணப்படும். இலையின் கீழ்ப்புறத்தைப் புரட்டிப் பார்த்தால் வெண்ணிறமான பங்கஸ் இழைகள் இலைமுழுவதும் பரவியிருக்கக் காணப்படும். அத்துடன் தண்டுகளும் இதனால் பாதிக்கப்படும். பயிர் வளர்ச்சி ஏற்படும்போது அதிக பாதிப்பு



ஏற்படுவதுடன், மழைக் காலங்களில் நோய்த்தாக்கம் மேலும் அதிகரிக்கும்.

முற்கூற்று வெளிறல் நோயானது, வெய்யில் காலங்களிலேயே ஏற்படும். பயிரின் முதிர்ச்சியடைந்த இலைகளில் முதலில் கபில நிறப்புள்ளிகள் தோன்றும். பின்னர், இப்புள்ளிகள் வளையம் போன்ற வடிவில் பயிரின் முழு இலைகளுக்கும் பரவும். நோய்த் தாக்கம் மிகவும் அதிகரித்தால் பயிரின் கீழ்ப் பகுதியில் காணப்படும் இலைகள் மஞ்சள் நிறமாகிவிடும்.

இந்த இரு நோய்களையும் அநேகமாக ஒரே இரசாயனத்தால் கட்டுப்படுத்தலாம். பயிரின் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில் பங்கஸ் நாசினியான அன்ரக்கோலைப் பயன்படுத்தலாம். இதன் பொரமி வெண்ட செப், டைதேன் எம்.மங்கோசப் நாசினிகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தலாம். மழை காலங்களில் இந்த நோய்த் தாக்கங்கள் பயிரில் இருந்தால் றிடோமில், சென்டோப், பெரவிடி போன்ற பங்கஸ் நாசினிகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தலாம். முழுப் பயிர்களிலும நோய் காணப்பட்டால் பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட முழுத் தோட்டத்துக்கும நாசினியை விசிறுதல் வேண்டும். இதன் காரணமாக, ஏனைய இடங் களுக்கு நோய் பரவுவதைத் தடுக்கலாம். இவற்றைக் காலை நேரத்தில் விசிற வேண்டும்.

இலைகளின் கீழ்ப் பகுதிக்கு விசிறும்போதும் மழைகாலத்தில் விசிறும்போதும் 'சேர்பெக்டன்ட்' போன்ற ஒட்டக்கூடிய திரவத்துடன் கலந்து நாசினிகளை விசிறுதல் வேண்டும். நாசினிகளை விசிறி ஆறு மணித்தியாலத்திற்குள் மீண்டும் விசிறவேண்டும். இவற்றைவிட ஏனைய நோய்களான வாடல் நோய், கறுப்புக்கால் நோய் போன்ற நோய்களும் ஏற்படலாம். பயிர் வாடிக் காணப்பட்டால் நோயின் தாக்கம் தெரியும். ஏர்வினியா எனப்படும் நோய் ஏற்பட்டால் தண்டின் அடிப்பகுதி கபில நிறமாவதுடன, தண்டுகள் முறிந்து விழுவதையும் அவதானிக்கலாம். அவதானித்தவுடன் பாதிக்கப்பட்ட பயிரினை மண்ணுடன் சேர்த்து அகற்ற வேண்டும். அகற்றாதுவிடின் அது எல்லாப பயிர்களுக்கும் பரவிவிடும்.

வைரஸ்நோய் பயிர்களில் ஏற்படும்போது பயிரின் வளர்ச்சியானது பெரிதும் தடைப்படும். இலைகள் சுருண்டு மஞ்சள் நிறமாவதுடன், இலைகளில் புள்ளிகளும் காணப்படும். இவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய இரசாயனங்கள் இல்லாத காரணத்தினால் நோயால் பீடிக்கப்பட்ட பயிர்களைப் பிடுங்கி எரித்து விடுதலே சாலச் சிறந்தது. விதை கிழங்குகளை நோக் கமாகக்கொண்டு கிழங்குச் செய்கையில் ஈடுபடும்போது வைரஸ் நோய் கள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். ★

**வைஷாலி**

## கால்நடைகளுக்கான

# சினைப்படுத்தும் நிலையம் கிளிநொச்சியில் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.11

கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் ஒன்று கிளிநொச்சியில் திறந்துவைக்கப்படவிருப்பதாக திருநெல்வேலியிலுள்ள செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி டாக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் கிளிநொச்சி 155ஆம் கட்டைப பகுதியில் இந்த நிலையம் செயற்பட்டுவருவதாகவும் -

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் இந்த நிலையம் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு செய்கை முறைச் சினைப்படுத்தல் சேவைகளை வழங்கி வருவதாகவும் - அவர் மேலும தெரிவித்தார்.

கடந்த வருடம் மட்டும் யாழ்.மாவடடத்தில் வளர்க்கப்படும் கால்நடைகளில் 6ஆயிரத்து 800 கால்நடைகள் செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பண்ணைகளில் ஆடு, மாடுகளுக்கு செயற்கைமுறைச் சினைப்படுத்தல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டபோதிலும் இந்த எண்ணிக்கை முன்னைய ஆண்டுகளை விட அதிகமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-12)

# நெஞ்சைவிட்டகலாத நினைவஞ்சலிகள்

## 31ஆம் நாள் 17ஆம் ஆண்டு



தோற்றம் 1917 - 11 - 27 மறைவு 2003 - 01 - 12



தோற்றம் 1932 - 02 - 22 மறைவு 1986 - 10 - 27

## செல்லப்பா ஐயாத்துரை திருமதி ஐயாத்துரை இராசமணி

சமர்ப்பணம்

அன்புமிகு தந்தையாய், தாயாய், மாமனாய், மாமியாய், பேரனாய், பேர்த்தியாய்,
பூட்டனாய், பூட்டியாய் வாழ்ந்த எங்கள் குடும்பத்தெய்வங்களே!

*ஆற்றலிலும் பண்பிலும் மேலாய் உயர்ந்து*
*எம்மை வாழவைத்த ஜோதிகளே!*
*எம்மோடு வாழ்ந்த நாள்களில்*
*எங்கள் இதயத்தில் நீங்காத இடம்பெற்றுவிட்டீர்கள்*
*எங்களிடமிருந்து உங்களை காலன் கவர்ந்தாலும்*
*உங்கள் நினைவுகளை கவர முடியாது!*

என்றும் உங்கள் நினைவுடன் கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

[பவானி - இராமச்சந்திரன்(இந்தியா), மதன்ராஜ்(ஹொலண்ட்), குகனேசன்(நியூஸிலாந்து), மாலினி - தவசீலன், சுகிர்தா, சுகல்யா, நந்தினி - சச்சிதானந்தம், தீனதயாளன் - லோஜனா (லண்டன்), கர்சியன், தரிஜனா, ஷன்சை, திவீகர், குமுதினி - ஞானச்சந்திரன், இரட்ணகுமார் - தர்சிகா (பிரான்ஸ்), சகிலன், லக்சன், டிலக்சன், விනுக்சன், ஸ்ரீதரன் - சுகந்தினி, ரஜாந்தி, கார்த்திகா, பிரசாத]

(C/26465)

## பெயர்ப் பலகைகளில் சுவரொட்டிகள்

நகர வீதிகளின் நடப்பட்டுள்ள பெயர்ப்பலகைகளில் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களினால் நிறுவப்பட்டுள்ள வீதிப் பெயர்ப் பலகைகள் மற்றும் பொது நிறுவனங்களின் அறிவித்தல் பலகைகளில் எல்லாம் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. இதனால் வீதிகளின் பெயர்களை அறிய முடியாது. குறிப்பாக தென்னிலங்கையிலிருந்து வருபவர்கள் சிரமப்படுவதை காணமுடிகிறது.

(ஒ-86)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 - 07 - 1942 மறைவு 30 - 01 - 1996

## அமரர் குமாரசாமி இராசரத்தினம்

*(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர் - ஹாட்லி கல்லூரி, சயன்ஸ் சென்ரர் - மொடேர்ன் கல்வி நிலைய உரிமையாளர்)*

திதி : 11.02.2003

எண்ணொடு எழுத்துமுய்ய எழிலுறு கழகங்கண்டாய்
மண்ணொடு பொன்னுமாக வளமெல்லாம் தந்தாய் தேவே
கண்ணொடு மணியாய் நின்ற அண்ணலே பிரிவேன் தந்தாய்
விண்ணொடு சஷ்டியப்தம் வேதமான விடியலே எங்கு காண்போம்?

*மொடேர்ன் கல்வி நிலையம், நெல்லியடி.* (14354) மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

AEIAN வழங்கும் தினம் ஒரு பரிசு - 04

நாளை (12.02.2003) இடம்பெறவுள்ள இந்தியா - நெதர்லாந்து ஆட்டத்தில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தப்போவது யார்?

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

இக் கேள்விக்கான விடையை இந்த கூப்பனில் எழுதி நாளை (12.02.2003) நண்பகல் 12மணிக்குள் தினம் ஒரு பரிசு - 04, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்



## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003


Super Six பரிசுகள்

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. .................... 2. ....................
3. .................... 4. ....................
5. .................... 6. ....................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................



முதற் பரிசு கணனி

2ஆம் பரிசு தொலைக்காட்சி

விசேட பரிசுகள் கூப்பன்கள்



SuperSix பரிசு வுமாலா சைக்கிள்கள்

3ஆம் பரிசு வானொலி

ஆறுதல் பரிசுகள் விமான ரிக்கெட்டுக்கள்

தினம் தினம் ஒரு பரிசு கழிவுக் கூப்பன்கள்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

மாபெரும் இறுதிப் போட்டி

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது? (..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்? (..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு வுமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

# ஐ.நா.செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜயம் ரத்து!

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் இந்தியாவிலும் இலங்கையிலும் மேற்கொள்ளவிருந்த விஜயங்கள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

இம்மாத இறுதியில் ஐ.நா.செயலாளர் நாயகர் இலங்கைக்கு விஜயம் ... என்று வெளி விவ... அமைச்சு ...வித்திருந்தது.

ஆயினும், அந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. விஜயம் ரத்துச் செய்யப்பட்டது குறித்து ஐ.நா. சபை இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் அறிவித்திருக்கிறது எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், இவ்விஜயம் ரத்துச் செய்யப்பட்டதற்கான காரணம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. (ம)

# யாழ்.பொது நூலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கு விடுவதில் பிரச்சினைகள் இல்லை என கட்டடத் திணைக்களமும் கூறியுள்ளது. திறப்பு விழாவுக்கான அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. திறப்பு விழாவை எதிர்த்து சில சக்திகள் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால், எதுவித கடிதங்களோ அறிக்கைகளோ மாநகர முதல்வருக்கோ அல்லது மாநகர சபை உறுப்பினர்களுக்கோ கிடைக்கவில்லை. இதேசமயம், நூலகத் திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று மேயர் மேலும் தெரிவித்தார்.

**கலைக்க முன்னர் திறக்கின்றோம்**

மாநகரசபை உறுப்பினர் த.சுபத்திரன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

நூலகத் திறப்பு விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் தமது எதிர்ப்புக்கான காரணத்தை சரியாக வெளிப்படுத்த வேண்டும். நூலகம் திறக்கப்பட்டாலும் நூலகத்திற்கான உதவிகளோ அபிவிருத்திப் பணிகளோ தடைப்படப் போவதில்லை. எதிர்வரும் 17ஆம் திகதி மாநகரசபை கலைக்கப்படவுள்ளது. இதனால் 14ஆம் திகதி இதனைத் திறப்பதற்கு முடிவு செய்துள்ளோம். இது வெளிப்படையான விடயம். ஆகவே நூலகத்தைத் திறப்பதற்கு அனைத்துத் தரப்பும் தமது ஆதரவை வழங்கவேண்டும். திறப்பு விழாவிற்கான அழைப்புக்களை அனுப்புவதிலும் நாம் பாரபட்சம் காட்டவில்லை என்றார்.

**சுவீகரிப்பதைத் தடுக்க புனரமைப்பு**

மாநகரசபை உறுப்பினர் அரவிந்தன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

சுப்பிரமணியம் பூங்காவையும், யாழ். நகர மண்டபக் காணியையும் சுவீகரிப்பதற்கு இராணுவம் முழுமூச்சாகச் செயற்பட்டு வருகின்றது. எனவே எமது சொத்துக்களை விரைவில் புனரமைத்து இவற்றைத் தடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். மாநகர முதல்வர் தலைமையில் இப்பத்திரிகையாளர் மாநாடு இடம்பெற்றது.(ஒ-8)

## முழுமையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்த பட்சம் பௌதிக வளங்கள், நூல்வளங்கள் அனைத்தையும் கொண்டதாக இருக்கவேண்டியது அவசியமாகும். அந்த வசதிகளைக் கொண்டிராத நிலையில் நூலகம் திறக்கப்படுவது, எந்த வகையிலும் எதிர்பார்க்கப்படும் தேவைகளை நிறைவு செய்வதாக அமையமாட்டாது. அதுமட்டுமன்றி பூர்த்தியடையாதிருக்கும் நிலையில் திறப்பு விழா நடத்தி முடிக்கப்படுமேயானால் மிகுதி வேலைகளை நிறைவேற்றுதில் தாமதம் ஏற்படலாம் எனவே, நூலகத்தை நிறைவாய்ப் பூரணப்படுத்தி வளப்படுத்திய பின்னர் மக்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கப்படுவதே சாலச் சிறந்ததாகும். எனவே, நூலகத் திறப்பு விழாக குழுவினர் வேலையை முடிப்பதில் அக்கறை காட்டி அதனை முடித்த பின் திறப்பு விழாவினை நடத்த முயல்வது பயன்பாடுடையதாக இருக்கும் என்பதைக் கல்வி மேம்பாட்டு பேரவை சுட்டிக்காட்ட விரும்புகின்றது. என்றுள்ளது. (ம-3)

# தடை நீடிப்பு!

கொழும்பு,பெப்.11

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதாவுல்லா அணியினருக்கு எதிரான இடைக்காலத்தடை உத்தரவு எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் இது தொடர்பான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது மனுதாரர்களும், எதிர் மனுதாரர்களும் தத்தமது எழுத்து மூல விளக்கங்களை சமர்ப்பித்தனர். (ரெ)

## உணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் இடம்பெற்றது. அங்கிருந்து நாவலடிச்சந்தி, வியாபாரிமூலை, கூட்பர்மடம் ஊடாக இன்பருட்டி பிரதேசத்தை ஊர்வலம் சென்றடைந்தது. இன்பருட்டியில் இடம்பெற்ற வீரவணக்கக் கூட்டத்தை தொடர்ந்து ஊர்வலம் திக்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, நவிண்டில் ஆகிய பிரதேசத்தினூடாக வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை சென்றடைந்தது. ஊர்வலம் சென்ற பகுதிகள் எங்கும் கப்டன் பொதிகைத தேவனின் திருவுருவப்படத்திற்கு மக்கள் வீதியோரமாக குழுமி நின்று கண்ணீருடன் மலரஞ்சலி செலுத்தினர். வீரவணக்க நிகழ்வுகளில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர்.

இறுதி அஞ்சலி நிகழ்வுகள் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றன. மாவீரன் கப்டன் பொதிகைத்தேவனின் பெற்றோர் நடுகைக் கல்லினை திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இதேவேளை -

நெடுந்தீவுக் கடற்பரப்பில் காவியமான மூன்று வேங்கைகளுக்குமான அஞ்சலி நிகழ்வுகள் நேற்று மருதங்கேணியிலும் தென்மராட்சியிலும் இடம்பெற்றன. (ம-9-12-182-173)

## திட்டமிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் பரவலாக திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்கின்றன. தமிழர் தாயகப் பூமியைப் பறிக்கும் சதித் திட்டங்கள் மறைமுகமாக நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இதுகுறித்து கடந்த வெள்ளியும் சனியும் பேர்ளினில் நடந்த ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் நாம் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்தோம்.

"இத்தகைய நடவடிக்கைகள் தொடராமல் இருப்பதை தாம் உறுதிப்படுத்துவதாக அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

"பேச்சுக்கள் ஆரம்பமானபோது - முதல் ஓராண்டுகால ஆட்சியில் - திடமாக நடவடிக்கைகளை எடுத்து உறுதியாக செயற்பட்ட பிரதமர் ரணில், இப்போது தடுமாறுகின்றார். அவரது ஓராண்டு கால ஆட்சியின் முடிவில் அவரது அரசைக் கலைக்கும் அதிகாரம் அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதி குமாரதுங்கவின் கைகளுக்கு இப்போது வந்துவிட்டது. அதனால் எதையும் அவரால் செய்ய முடியாது என்பது தெளிவாகத் தெரிகின்றது" - என்றார் அவர். (ம)

# பெற்றோல் நிலைய உரிமையாளர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,பெப்.11

குடும்பத்தவர்களை புனித மக்காவுக்கு அனுப்பிவிட்டு வீட்டில் தனியாக இருந்த பெற்றோல் நிலைய உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கல்முனை பொலீஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனையில் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

எஸ்.எல்.அப்துல் அஸீஸ் (வயது 60) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். தனிப்பட்ட பகைமையே இச்சம்பவத்திற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. கல்முனைப் பொலீஸ நிலைய குற்றத்தடுப்பு அதிகாரி சன்ஜீவ விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். மேலதிக விசாரணைக்காக ஜனாஸா கல்முனை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா - ஆச்சிப்பிள்ளை

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா - ஆச்சிப்பிள்ளை நேற்று (10.02.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை - வள்ளிப்பிள்ளையின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா, கந்தப்பிள்ளை, அப்புத்துரை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2003) செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

*இல.75,கோவில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்,*
(14382)
தகவல்:
ஆ.தில்லைநாதன்.
(மருமகன்)

## ஆறுமுகம் இராசலிங்கம்

***(ஓய்வு பெற்ற பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)***

வீமன்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த ஆறுமுகம் இராசலிங்கம் நேற்று (10.02.2003) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் செல்லப்பா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தனலட்சுமி (தேவி)யின் பாசமிகு கணவரும் கமலாகரன் (கனடா), பவானி (சிறப்புக்கலைமாணி), றஜீவன் (லண்டன்), பிறேமினி (2 ஆம் வருடம் இசைத்துறை - நுண்கலைப்பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தனின் அருமை மாமனாரும் சுவஸ்திகனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, பாக்கியம், இராசம்மா மற்றும் கனகம்மா, தனபாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு, விநாசித்தம்பி, முருகேசு மற்றும் நடராசா, நிர்மலாதேவி, சிவகுருநாதன், காலஞ்சென்ற மோகனராஜா மற்றும் பத்மநாதன், சரோஜினிதேவி, ஸ்ரீரங்கநாயகி கனகசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2003) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் சிங்கம் வீதி, உடுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
*சிங்கம் வீதி,*
*உடுவில்.*

நிரந்தர முகவரி,
*வீமன்காமம்,*
*தெல்லிப்பழை.*
(14375)
தகவல்:
தனலட்சுமி -(தேவி மனைவி),
பிள்ளைகள்

## சரவணை சின்னத்துரை *(ஆச்சாரி)*

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சரவணை சின்னத்துரை (ஆச்சாரி) 08.02.2003 சனிக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணை - செல்லாச்சியின் ... மகனும் வல்லிபுரம் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென் ... கந்தையா, செல்லத்துரை (முள்ளியவளை) ஆகியோரின் சகோதரரும் ... தினம், தில்லைநாயகி, யோகம்மா, அருந்தமலர், இரஞ்சிதமலர், திருச்செல்வம், கமலாம்பிகை, கமலநாதன், வதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலிங்கம் (மகான்), செல்வரத்தினம், தியாகராஜா, சிவசிதம்பரம், சண்முகநாதன், திலகவதி, கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருபாகரமூர்த்தி, ஜெயந்தி, ஜெயந்தன், தாரகை, ஜெமோகன், ஜெயபாலன், ஜெயபாரதி, ஜெயரதி, நகுலினி, ஜெகன், பிரதாப், உமாசுதன், உமாகாந், நிஷாந், குருராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.02.2003) திங்கட்கிழமை நடந்தேறியது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்திரபுரம்,*
*மட்டுவில்.*
(14379)
தகவல்:
மனைவி, மக்கள்
மருமக்கள்.

## ஆறுமுகம் சிவஞானசுந்தரம்

கடற்கரை வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்தவரும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவஞானசுந்தரம் அவர்கள் கடந்த 09.02.2003 அன்று கனடாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்நடத்துநர் ஆறுமுகம் - ஜானகி அம்மாவின் அன்பு மூத்தமகனும் திரு.திருமதி இரத்தினம் பத்தரின் (மட்டக்களப்பு) அன்பு மருமகனும் சிவரத்னராணியின் அன்புக் கணவரும் பாபு,கோபு ஆகியோரின் தந்தையும் திருலோகசுந்தரி, சிவஞானசுந்தரம், திருபாலசுந்தரி, திருஞானசுந்தரி (யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), திருராஜசுந்தரி, காலஞ்சென்ற அமிர்தசுந்தரி, திருஅன்னசுந்தரி, சிவராஜசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*புலோலி மேற்கு,*
*புலோலி.*
(சி-26470)
தகவல்:
ஜானகி அம்மாவும் (தாய்)
குடும்பத்தினர்.

## கந்தையா மகேந்திரநாதன்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகேந்திரநாதன் நேற்று (10.02.2003) திங்கட்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மாவின் அன்பு மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2003) செவ்வாய்க் கிழமை மலேசியாவில் உள்ள செலாங்கூரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*
*T.P. 222 3838*
(சி-26467)
தகவல்:
சுசிலா - சாரங்கபாணி
(மருமகள்)


ARCHANA NURSING HOME
அர்ச்சனா வைத்திய நிலையம்
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.
Dr. RUKMANI RAJAH M.B.B.S (Colombo)
★ வெளிநோயாளர் சேவை
★ உள்ளக நோயாளர் சேவை
★ 24 மணிநேர சேவை
★ மகப்பேற்று வைத்திய சேவை
★ சகல மருத்துவ பரிசோதனை வசதிகள்
உள்ளக நோயாளர்களுக்கான தங்குமிட வசதிகள் மிகத்தரமான முறையில் செய்யப்பட்டுள்ளன.
(14246)



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்
பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல்
காலம் - நாளை [12.02.2003] புதன் 1.00 மணி
இடம் - விஞ்ஞானக் கல்வி நிலையம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
யாழ்.மாவட்டச் செயற்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி இறுதி முடிவு மேற்கொள்வதற்காக பொதுச் சபைக் கூட்டம் அழைக்கப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கோட்டங்களிலும் இயங்கும் தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
(14378) செயலாளர், யாழ்.மாவட்டம்.



யாழ்.மாவட்ட கராத்தே சங்கம்
மேற்படி சங்கத்தின் இவ்வருட நிர்வாக சபையின் முதலாவது கூட்டம் 15.02.2003 காலை 10.30 மணிக்கு யாழ். Y.M.C.A. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சங்க வளர்ச்சிக்கான நல்லாலோசனைகள் தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதால் தங்களது வருகையை முக்கியத்துவமாக கருதுகின்றோம்.
(14368) செயலாளர்.


# கண்ணீர் அஞ்சலி

எமது ஊர்புரம் கிழக்கு கிராம உத்தியோகத்தர் *திருமதி இராஜேஸ்வரி குலவீரசிங்கம்* அவர்களது அன்புக் கணவர்

## இ. குலவீரசிங்கம்

அவர்கள் பிரிவால் துயருறும் அவர்களது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

*வலிகாமம் மேற்கு*
*பிரதேச செயலகம்,*
*சங்கானை.*
(C/26466)
வலி.மேற்கு பிரதேசசெயலக
உத்தியோகத்தர்கள்
நலன்புரிச்சங்கம்.


பயிற்சி வகுப்புகள்
★ முத்து மாலை பின்னுதல்
★ சாரி வேர்க் பெயின்ரிங்
பதிவுகளிற்கு
138/3, கோவில் வீதி (வடக்கு)
நல்லூர்
காலை 9.00 - ந.ப. 12.00 மணிவரை
(பு.சீந)
(14347)



ராஜா யாழ்ப்பாணம்.
4 ஆவது வாரமாக...
விஜய், விக்ரம், ...
அஜித்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30



நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், குஷ்பு, மீனா, கபாலி நடித்த
நாட்டாமை
காட்சிகள்
தினசரி: 11.00, 3.00, 6.30 (பு.நே.)
(14377)



நிரஞ்சனாஸ் சங்கானை
மாதவன், மீராஜாஸ்மின் நடித்த
ரன்
காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
THE MUMMY RETURNS

# கோபாலபுரம் பொறுப்பாளருக்கு திருமலை நீதிமன்றம் பிடியாணை

திருகோணமலை,பெ.11

திருகோணமலை, நிலாவெளி, பகுதியிலுள்ள கோபாலபுரத்தில் இருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனைப் பொறுப்பாளர் என்.தூயவனுக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்தது.

கோபாலபுரத்தில் தூபி ஒன்றைக் கட்டி பொது அமைதிக்கு ஊறு விளைவித்தார் என்று குற்றஞ்சாட்டி குச்சவெளிப் பொலீஸார் அவர்மீது வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றனர். அந்த வழக்கு நேற்று நீதிவான் எஸ். தியாகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

என்தூயவன் நீதிமன்றத்தில் ஆஜராகததை அடுத்தே பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பொலீஸ் தரப்பில் திருமலை பொலீஸ் அத்தியட்சகர் தயாசமரவீர, குச்சவெளி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் லூடவைக் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கின் அடுத்த தவணை மார்ச் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி ஜமாலியா கடல் பரப்பில் உயிர்நீத்த 22 புலிகளின் 13ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கோபாலபுரத்தில் தூபி கட்டப்பட்டது. (ம)

### கலந்துரையாடல்

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்வி மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்முத்திரைச் சந்தியில் உள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை - நாளை நடைபெறவிருந்த மாதாந்தக் கலந்துரையாடல எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேனொளி முன்பள்ளி நிலையத்தில் நடைபெறவுள்ளது என சங்கத் தலைவர் தனா.கந்தையா அறிவித்துள்ளார். (எ)

# எரிபொருள்கள் மீண்டும் விலை உயருகின்றன

அமெரிக்கா - ஈராக் யுத்தம் காரணமாக உலகச் சந்தையில் எண்ணெய் விலை மேலும் உயருமேயானால் உள்நாட்டில் டீசல் விலையில் விசேட மானியம் வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தெரிகிறது. வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான குழுவுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பணிப்புரையின்படியே அரசாங்கம் இத்தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறது.

இதற்கிடையே பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அடுத்த வாரத்தில் லீற்றருக்கு 2 ரூபாவால் அதிகரிக்கபடும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனத்தத் தலைவர் தஹம் விமலசேன தெரிவித்திருக்கிறார். (ம)

# 13 தொண்டர் ஆசிரியர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு,பெப்.11

வடமத்திய, வடமேல் மாகாணங்களின் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று முதல் கொழும்பிலுள்ள கல்வியமைச்சுக்கு எதிரே சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

ஒரு பௌத்த பிக்கு உட்பட 13 தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுக் காலை 10.30 மணிக்கு இப்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தங்களின் கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர்.

தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்றுகோரி வட மத்திய, வடமேல் மாகாணங்களைச் சேர்ந்த 246 தொண்டர் ஆசிரியர்கள் கல்வியமைச்சு எதிரே கடந்த 141 நாள்களாக சத்தியாக்கிரகப் போராட்டம் மேற்கொண்டிருந்தனர். (ம)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: நியுஸிலாந்து

ஆட்டநாயகன்: சனத் ஜயசூரிய முடிவு: 47 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

### இலங்கை

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| எம்.எஸ்.அத்தப்பத்து | c/டைரிஸ் | b/பொண்ட் | .... | 06 |
| சனத் ஜயசூரிய | | lbw ஆஸ்லே | .... | 120 |
| எச்.பி.திலகரட்ன | not out | | .... | 81 |
| ஜயவர்த்தன | | lbw அடம்ஸ் | .... | 01 |
| ஏ.டி.சில்வா | c/டைரிஸ் | b/ஆஸ்லே | .... | 12 |
| கே.சங்ககார | c/அடம்ஸ் | b/ஆஸ்லே | .... | 13 |
| பி.ஆர்னோல்ட் | | b/பொண்ட் | .... | 12 |
| சி.வாஸ் | | b/அடம்ஸ் | .... | 05 |
| முரளி | not out | | .... | 04 |
| உதிரிகள் | | | .... | 17 |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | .... | 272/7 |

களம் இறங்காதோர்: டி.பெர்னாண்டோ, டபிள்யு.குணரட்ண

பந்துவீச்சு

பொண்ட்: 10-1-44-2, அடம்ஸ்: 09-0-58-2, ஆஸ்லே: 7-0-34-3.

### நியூஸிலாந்து

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| பிளிமிங் | c/சங்ககார | b/குணரட்ண | .... | 01 |
| ஆஸ்லே | ரன்அவுட் | சி.வாஸ் | .... | 00 |
| மக்மிலன் | c/சங்ககார | b/குணரட்ண | .... | 03 |
| டைரிஸ் | c/வாஸ் | b/ஆர்னோல்ட் | .... | 141 |
| ஹெய்ன்ஸ் | | c&b/டி சில்வா | .... | 32 |
| வின்சன் | c/முரளி | b/ஜயசூரிய | .... | 01 |
| ஹரிஸ் | | b/முரளி | .... | 13 |
| ஓறாம் | st./சங்ககார | b/முரளி | .... | 12 |
| அடம்ஸ் | c/முபாரக்(துணை) | b/ஆர்னோல்ட் | .... | 01 |
| டப்பி | c/சங்ககார | b/ஆர்னோல்ட் | .... | 04 |
| பொண்ட் | not out | | .... | 02 |
| உதிரிகள் | | | .... | 15 |
| மொத்தம் | (45.3 ஓவர்கள்) | | .... | 225/10 |

பந்துவீச்சு

குணரட்ண: 5-1-19-2, முரளி: 9-0-43-2, ஆர்னோல்ட்: 8.3-0-48-3.

### இன்றைய ஆட்டங்கள் – பெப். 11

| | | | | |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | Vs | பாகிஸ்தான் | வேண்டரேஸ் | 1.30pm |
| பங்களாதேஷ் | Vs | கனடா | கிங்ஸ்மீட் | 2.00pm |

# தவறான தகவல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட பல வாய்மூலத் தகவல்கள், படகு இந்தியப் பதிவைக் கொண்டிருந்தது என்ற தகவல், படகுக்கு தீமூட்டப்பட்ட போது கண்காணிப்புக் குழுவின் மொழிபெயர்ப்பாளர் படகில் இருந்தார் என்ற தகவல் முதலானவை தவறானவை. இந்த அறிக்கையின் மூலம் அவை திருத்தப்படுகின்றன." என்று கண்காணிப்புக் குழுவின் நேற்றைய நீண்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சம்பவம் பற்றி பல விவரங்கள் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அவற்றின் சாரம் வருமாறு.

நெடுந்தீவுக் கடலில் ட்ரோலர் ஒன்றை புலிகளின் விசைப்படகு ஒன்று கட்டியிழுத்துச் செல்கின்றது என்றும் - அவற்றை கடற்படை முற்றுகையிட்டிருக்கிறது என்றும் -

கண்காணிப்புக்குழு கடற்படையின் உதவிக்கு வரவேண்டும் என்று 6ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கண்காணிப்புக் குழுவுக்கு கடற்படையிடமிருந்து அழைப்பு வந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள கண்காணிப்புக்குழு, கடற்படையிடமிருந்து ஆரம்பத்தில் கிடைத்த தகவல் இந்தியப் படகு மாதிரியான ஒன்றில் விடுதலைப் புலிகள் வலுக்கட்டாயமாக ஏற முயற்சி செய்கிறார்கள். படகுகளை முற்றுகையிட கடற்படை தயாராகிறது. கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவர் அங்கு பிரசன்னமாக இருக்கவேண்டும் என்பதாகும்.

மாலை 4 மணியளவில் கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவர் அந்த இடத்தைச் சென்றடைந்தார்.

மீன்பிடிக்கும்போது ட்றோலரின இயந்திரம் பழுதடைந்துவிட்டது. அதனால் ட்றோலரைக் கட்டியிழுத்துச் செல்ல முனைகிறோம் என்று விசைப் படகின் கப்டன் சொன்னார்.

படகுகளைக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் சோதனை இடலாம். ஆனால், கடற்படையினரை அனுமதிக்கமுடியாது. கடற்படை சோதனையிட வந்தால் தாங்கள் தற் கொலை செய்துகொள்ளப்பேவதாக படகுகளில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

விசைப்படகில் 12 பேர் இருந்தார்கள் படகு கண்காணிப்புக் குழு உறுப்பினரால் சோதனையிடப்பட்டது. அதில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையிலான சட்ட விரோதப் பொருள் எதுவும் இருக்கவில்லை.

மாலை 5 மணியளவில் அந்த விசைப்படகை அங்கிருந்து செல்ல கடற்படையினர் வழிவிட்டார்கள்.

ட்றோலரைச் சோதனையிடச் சென்ற கண்காணிப்புக்குழு உறுப்பினர் தமக்கு இன்னோர் உறுப்பினரின் உதவி தேவை என்றார். உதவிக்கு மற்றோர் உறுப்பினர் அனுப்பப்பட்டார்

அப்போது இருட்டிவிட்டது. கடற்படைப் படகுகள் இரண்டு நின்றன. அவை பாய்ச்சிய வெளிச்சத்தில் ட்றோலர் அருகே, கடற்படையினருடன் சென்ற கண்காணிப்புக் குழுவினர் தங்களுடன் கடற்படை அதிகாரி ஒருவரும் ட்றோலரைச் சோதனையிட வரவேண்டும் என்று கூறினார். அதற்கு படகில் இருந்த புலிகள் இடமளிக்கவில்லை. கடற்படை அதிகாரி படகில் ஏறினால் படகை கொளுத்தி விட்டு தாமும் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மீண்டும் பயமுறுத்தினர் அவ்வளவோடு கடற்படைப் படகு கண்காணிப்புக் குழுவினருடன் ட்றோலரை விட்டு விலகி அப்பால் சென்றுவிட்டது.

இதன் பின்னர் போரினில் சமாதானப் பேச்சுக்கள் நடத்திய குழுவினருடன் கண்காணிப்புக்குழு தொடர்புகொண்டு நிலைமையைத் தெரிவித்தது.

பேச்சுக் குழுவினர் கேட்டுக் கொண்டபடியால் வழமைக்கு மாறாக கண்காணிப்புக் குழுவினர் தாமே ட்றோலரைச் சோதனையிட்டனர். மேல்தளத்துக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெரிய, சிறிய ஆயுதங்களும் அவற்றுக்கான வெடிபொருள்களும் கிரேனேட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. (விவரம் அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது) இது யுத்தநிறுத்த மீறல் என்று படகில் இருந்த புலிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களில் கிரேனேட்டுக்கள் மட்டும் பாதுகாப்புக் கருதி கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. படகில் இருந்த விடுதலைப் புலிகளை கடற்படையினரிடம் ஒப்படைக்காமல் தாங்களும் அவர்களோடு இருக்கவே கண்காணிப்புக் குழுவினர் விரும்பினர். ஆயினும் ட்றோலரை நெடுந்தீவுக் கரைக்கு கடற்படைக் கப்பலில் கட்டியிழுத்துச் செல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

சிறிது தூரம் சென்றதும் மேலிடத்து அனுமதி கிடைத்ததை அடுத்து படகில் இருந்த புலிகள் தமது கிளிநொச்சி தலைமைச் செயலகத்துடன் வானொலித் தொடர்பு பெற்று 15 நிமிடங்கள் பேசினர். பேச்சு முடியும் தறுவாயில் ஒருவர் ட்றோலரின் பின்புறம் சென்றார். பேச்சு முடிந்ததும் ஒருவர் தனது கையில் போத்தல் ஒன்றையும் லைட்டர் ஒன்றையும் வைத்திருந்தார். கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவர் அந்த லைட்டரை பிடுங்கி கடலில் எறிந்தார். அதே வேளை, ட்றோலரின் பின்பக்கம் தீப்பற்றி எரிந்தது. கண்காணிப்புக் குழுவினர் முன்பக்கம் ஓடிப்போய் கடலில் குதித்தனர்.

அதேவேளை, கடற்படைக் கப்பலில் இருந்த கடற்படையினரும் கண்காணிப்புக்குழு மொழி பெயர்ப்பாளரும் ட்றோலரில் இருந்த மூன்று புலிகளும் தற்கொலை செய்துகொண்டதைக் கண்டார்கள்.

இதுபற்றி போரின் பேச்சுக் குழுவினருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்களோடு சேர்ந்து முழுக் கண்காணிப்புக் குழுவும் உயிரிழந்த மூன்று புலிகளின் குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படி கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ம)


**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

LECTURES BY:
**MR.M.A.HARI**
★ 3 ஆவது புதிய பிரிவு ஆரம்பம்
12. 02. 2003 புதன் மாலை 5 மணி
WED. MON. } 5p.m. - 6 p.m.
★ அனுமதிக்கு முந்துங்கள் ★
HARY'S INSTITUTE
இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம். (14369)



## தென்னிந்தியாவில் இருந்து



முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
ராஜகுருசாமி
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA. (14324)


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தை மாதம் 29ஆம் நாள் (12.02.2003) புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.01 மணி (பழைய நேரம்) வரையுள்ள மீனலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **ரகுமார்** அவர்களுக்கும்



எமது புத்திரி திருநிறை செல்வி **ஜெயசுதா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி க.இராசேந்திரம்
கும்பப்பிள்ளை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி சி.செல்வரத்தினம்
தொகுதிப் பண்ணை
இராஜ வீதி, கோப்பாய்.

★ இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் (C-26471)


## நாடக ஆற்றுகை

"கண்டறியாதன கண்டு...."

இடம்: கைலாசபதி அரங்கு
நாள்: 12.02.2003 புதன்கிழமை
நேரம்: காலை 10.30 மணி
மாலை 3.30 மணி (புதிய நேரம்)
பிரவேசம் 50/=
புதிய உயர் கல்லூரி
யாழ். பேராதனை வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்.
(14305)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# துயர் பகிர்கின்றோம்

எமது பணிமனை உத்தியோகத்தர்

செல்வி சி.ஜெகதீஸ்வரி அவர்களின்

அன்புத் தாயார்

## திருமதி சின்னையா நாகேஸ்வரி

அவர்கள் 10.02.2003 அன்று காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது பணிமனை உத்தியோகத்தர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி, உத்தியோகத்தர்கள்,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
(14370) பருத்தித்துறை.

## VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified person upto 15th March 2003 for the under mentioned posts.

### FACULTY OF ARTS

1. Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Fine Arts/ Drama & Theatre Arts / Art & Design / Dance (Barathanatyam)/ Carnatic Music (Vocal/ Violin/ Veena/ Miruthangam)/ Home Economics/ Geography ***

   *** Perference will be given to those who specialized in Geographical Information System or Planning.
2. Senior Lecturer Grade I in Economics.

### LIBRARY

Senior Asst.Librarian Grade I/ Senior Asst.Libranan Grade II/ Asst.Librarian.

Preference will be given to those who have competent Knowledge in Information System.

### PHYSICAL EDUCATION

Lecturer (Probationary) in physical Education.

| POST | SALARY SCALE |
|---|---|
| Senior Lecturer Grade I/ Senior. Asst. Librarian Gr.I | Rs 25,500 - 8X 550 - 29,900/- p.m. |
| Senior Lecturer Grade II/ Senior. Asst. Librarian Gr.II | Rs 21,500 - 8X 475 - 25,000/- p.m. |
| Lecturer (Probationary)/ Asst.Librarian | Rs 11,820 - 10X 375 - 15,570/- p.m. |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri lanka. either in person or by sending a money order for Rs.20/- per form. Those who wish to obtin application forms by post are requested to send a Money order/postal order drawan in favour of the 'Bursar, University of Jaffna" together with a self - addressed stamped envelop 23 X 30 c.m. in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR,**
University of Jaffna, Sri lanka.
10.02.2003. (C/26463)

## யாழ்.இந்து மகளிர் மாணவிகளுக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ். இந்து மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவில் 2002 ஆம் ஆண்டு கணனி கல்விப் பரீட்சைககுத் தோற்றிய மாணவிகள் அனைவரையும் நாளைமறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரிக்கு சமுகம்தருமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ம-ரி)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம்,பெப்.11

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்.போதனாவைத்திய சாலையில் இரத்த வங்கியில் இரத்த தானம் வழங்கும் முகாம் ஒன்று நடைபெற்றது. (ம-ரி)

## கலந்துரையாடல்

வலி.வடக்கு,பெப்.11

உடுவில் தெல்லிப்பழை பிரதேசத்திற்கு உட்பட்ட சகல பொது அமைப்புகளதும் பிரதி நிதிகளுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சுனாகம் திருஞானசம்மந்தர் வித்தியாலதில் நடைபெறவுள்ளது.

இதில் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைப் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்கள், வர்த்தக சங்கங்கள், ஆலய, தேவாலய நிர்வாகத்தினர், சிகை அலங்கரிப்பாளர் சங்கப் பிரதிநிதிகள், விவசாய, கைத்தொழில் சம்மேளனங்கள், மாதர்முன்னேற்றச் சங்கங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வலிகாமம் கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தினர் வேண்டியுள்ளனர். (ம-86)

## றுகுணு பல்கலைக்கு யாழ்.மாணவர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.11

முதன்முறையாக றுகுணு பல்கலைகழக பொறியியல் பீடத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு மாணவர்கள் புதிய கல்வியாண்டுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இ.சஷ்ரீக்குமரன், தி.தலீபன் ச.சசன் ஜீவராஜன், த.அனுஷாந் ஆகிய மாணவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-ரி)

### மணமகள் தேவை

சித்திரை நட்சத்திரம், 4ஆம் பாதம், செவ்வாய்க்குற்றமற்ற கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற, 29 வயதுள்ள மணமகனுக்கு பெற்றோர், 26 வயதுக் குட்பட்ட, A/L இற்குகூடிய கல்வித் தகைமையுள்ள, சிவந்த நிறமுள்ள கௌரவமான குடும்பப் பெண்ணைத் தேடுகின்றனர்.

தொடர்புகட்கு :
021-2263324, 0777-721515, 021-2263322 (14373)

# விவாஹ சோபனம்

அன்புடையீர்!

ஸ்ரீமத், சங்கரநாராயணனர் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் தை மாதம் 29ஆம் நாள் (12.02.2003) புதன்கிழமை மிருகசீரிஷ நக்ஷத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 8மணி 30நிமி. முதல் 10மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதமகுரு | மாவையாதீனம் |
| பிரம்மஸ்ரீ ச.கணபதிசுவாமிக் குருவின் | பிரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்களின் |
| பௌத்திரரும் | பௌத்திரியும் |
| பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு தம்பதிகளின் | பிரம்மஸ்ரீ து.குமாரசாமிசர்மா தம்பதிகளின் |
| ஜ்யேஷ்ட புத்திரனுமாகிய | ஜ்யேஷ்ட புத்திரியுமாகிய |
| சிரஞ்சீவி சு.கணபதீஸ்வரசர்மா (கண்ணன்) | சௌபாக்கியவதி விஜயலக்ஷ்மி (விஜி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

பெரியோர்கள் நிச்சயித்தபடி பாணிக்கிரகண திருமாங்கல்யதாரண விழா நடைபெற ஸ்ரீ வல்லிபுரேசன், நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஸ்வாமி மாவை முருகன் ஆகியோரின் திருவருள் கைகூடியுள்ளது. மணமகள் இல்லத்தில் நடைபெறும் மேற்படி வைபவத்தில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து; மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் :அதிகாலை 4.00மணி 12.02.2003 மணமகனில்லத்தில்
வதூவர சிருகப்பிரவேசம் : மாலை 4.00 12.02.2003 மணமகனில்லத்தில்
14.02.2003 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி வரவேற்புபசாரம் - மணமகளில்லத்தில்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு, | பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் |
| (பிரதமகுரு, வல்லிபுர கோவில்), | (நகுலேஸ்வர ஆதீனம்), |
| ஸ்ரீமதி சு.தனலட்சுமி அம்மா தம்பதிகள், | ஸ்ரீமதி வேதநாயகி அம்மா தம்பதிகள், |
| சிவன் கோவிலடி, ஆவரங்கால். | பிரம்மஸ்ரீ து.குமாரசாமிசர்மா, |
| 0777 245547 | ஸ்ரீமதி கு.கெங்காதேவி தம்பதிகள், |
| | சேந்தாங்குளம் றோட், இளவாலை. |
| | 070-212440 |

இருவீட்டார் அழைப்பு

### வரவேற்பாளர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமதி உ.கணபதிசுவாமிக்குரு (பேர்த்தி), | |
| பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமகுரு குடும்பத்தினர், | |
| பிரதமகுரு. ஸ்ரீவல்லிபுர கோவில், | செல்வி கு.கிரிஜா, |
| பிரம்மஸ்ரீ ச.க.இராமச்சந்திரகுரு குடும்பத்தினர் - மலேசியா, | பிரம்மஸ்ரீ கு.சிவசங்கரசர்மா (கனடா), |
| பிரம்மஸ்ரீ ஜெனார்த்தனசர்மா, | கு.உமாசங்கரசர்மா, |
| பிரம்மஸ்ரீ சு.கிரிதரசர்மா. | கு.ஸ்ரீசங்கர்சர்மா. |

(14357)

## University of Jaffna, Sri Lanka
### FACULTY OF GRADUATE STUDIES
### M.A. in Cultural Studies
First Semester Examination - 2002 / 2003

The above examination will commence on 10.03.2003. Candidates could collect the application form at the office of the Dean, Faculty of Graduate Studies from 13.02.2003. Completed application should be submitted at the same office on or before 20th February 2003.

Registrar
(C/26462) 10.02.2003

## நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்





| சரவணை அன்னலட்சுமி | | சரவணை றஞ்சிதராசா | |
|---|---|---|---|
| தோற்றம் | - 12.04.1936 | தோற்றம் | - 17.02.1968 |
| மறைவு | - 22.11.2001 | மறைவு | - 24.01.2002 |

திதி : 11.02.2003

*ஆண்டுகள் ஒன்று சென்றாலும் ஆறாது எம் துயரம்!*
*காலத்தின் கோலத்தால் நீங்கள் கரைந்தபோது....*
*உம் நினைவில் எம் இதயம் என்றும் துடிக்கிறது*
*எப்பிறப்பில் நாம் காண்போம் உம் இனிய முகம்?*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி!*

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும்:
சரவணை குடும்பத்தினர். (14365)

# OBITUARY NOTICE

## MUTHUTHAMBY RATNASABAPATHY

*(Retired Account & Partner Malayan Trading Co. Jaffna)*

Muthuthamby Ratnasabapathy who lived in Edmonton, London after retirement, expired on Saturday 8th February 2003.

He was the beloved husband of Bhuvanaranee and brother of Late Maheswary (Kokuvil), Late Kanagasingam (Kokuvil) and Thiyagarajah (Brazil), Father of Surabi and Narendran, Father-in-Law of Dr. Visvanathan and Suthamathi, Grand Father of Vibeesha, Ratheesha, Brahman and Varthana all of London.

Last rites and cremation will take place on Tuesday 11th February 2003 at Hendon Crematorium, London.

| | |
|---|---|
| *02, Crowland Gardens,* | **V.Sivagnanam** |
| *South Gate,* | 11, Ponnappa Lane, |
| *London N14 6AP,* | Vannarpannai, |
| *U.K. T.P. : 208-3725431* (14339) | (Informant) |

# மரண அறிவித்தல்

## இராமநாதன் குலவீரசிங்கம்


சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் குலவீரசிங்கம் 09.02.2003 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுழிபுரம் சிங்கம் றேடியோ சென்ரர் முன்னாள் உரிமையாளரும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சின்னப்பு - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (கிராமசேவையாளர் - சுழிபுரம் கிழக்கு) அவர்களின் அன்புக் கணவரும் சுதாகர், தனுஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை) அவர்களின் அன்புத் தந்தையும் சோதிலிங்கம் (கனடா), தங்கரத்தினம், பூமணி (அவுஸ்திரேலியா), தவராஜா (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), இராஜலட்சுமி (கொழும்பு), மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவி (கனடா), காலஞ்சென்றவர்களான வேலாயுதம், மகேந்திரம் மற்றும் விமலாதேவி, சோமசேகரம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், கொழும்பு கொமேர்சல் கொம்பனி), சிறீதரன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், சிமெந்து கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற சுப்பிரமணியம், நாகேஸ்வரி (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆறுமுகம் பரமேஸ்வரன் (அம்பாள் களஞ்சியம், வழக்கம்பரை, சுழிபுரம்) அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2003) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| *சுழிபுரம் கிழக்கு,* | தகவல்: |
| *சுழிபுரம்.* (14372) | மனைவி, பிள்ளைகள். |


இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் பஜாஜ் மோட்டார் சைக்கிளுடன் வெற்றி நிச்சயம் !
விசேட கொடுப்பனவு
2003 பெப்ரவரி 11 முதல் 13 வரை நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பஜாஜ் மோட்டார் சைக்கிளுடனும் 1000 ரூபா விலைக்கழிவும் ஹெல்மட், ஜக்கட் மற்றும் பெறுமதிமிக்க பயணப்பை ஒன்றும் இலவசம்.
Pulsar
விலை ரூபா 106,925/-
• 150 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• 5 கியர்கள் கொண்ட வேக
Caliber croma
விலை ரூபா 89,180/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
Caliber
விலை ரூபா 81,672/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
BOXER AT
விலை ரூபா 63,654/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
BOXER CT
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
BOXER CT Deluxe
விலை ரூபா 70,934/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
M80 FOUR STROKE
விலை ரூபா 55,283/-
• 74 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
Legend
விலை ரூபா 83,037/-
• 145 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
Spirit
விலை ரூபா 56,739/-
• 60 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• கிக் மற்றும் ஸ்செல்வ் ஸ்டார்ட்டர்.
DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.
குறிஞ்சி ட்ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0777-979279
பஜாஜ் பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.
Mel Ads

# நெடுந்தீவுச் சம்பவத்துக்கு கண்டனங்களும் வீர காவியமானோருக்கு அஞ்சலிகளும்

யாழ்ப்பாணம்,பெப்.11

நெடுந்தீவுக் கடற் பரப்பில் கடந்த 6ஆம் திகதி விடுதலைப் புலிகளின் படகை இலங்கைக் கடற்படையினர் சுற்றிவளைத்த சம்பவத்துக்குக் கண்டனங்களையும், அதில் வீரகாவியமான வேங்கைகளுக்கு அஞ்சலிகளையும் பல பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பொது அமைப்புகள் வெளியிட்ட அறிக்கைகளின் சாராம்சம் வருமாறு.

## வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

கண்காணிப்புக் குழுவின் ஆற்றாமையாலும் செயற்திறனற்ற நடவடிக்கையாலும் மூன்று இளம் வீரர்கள் பலியாகியுள்ளனர்.

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவேளை இயந்திரம் பழுதடைந்ததால் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்புலிகள் தகவல் அறிந்து தமது சகாக்களை மீட்டு இழுத்துச்சென்றனர்.

அப்போது கடற்படையினர் தடுத்துள்ளனர். பல மணித்தியாலங்கள் ஏற்பட்ட முறுகல் நிலைமைகளைத் தணிக்கவோ, சம்பந்தப்பட்ட படகை விடுவிக்கவோ ஆற்றல், ஆளுமை இல்லாதவர்கள் கண்காணிப்புக் குழுவினர் என்ற உண்மை நிலையைப் புரிந்துகொண்ட புலி வீரர்கள் மூவரும் தமது படகையும் எரித்து தம்மையும் அழித்துக்கொண்டனர்.

இம்மட்டோடல்லாமல் நாளாந்தம் கடற்றொழிலாளர்களைப் பல வழிகளிலும் கட்டுப்படுத்தித் துன்புறுத்திவரும் கடற்படையினரும் கரைக் காவல் இராணுவமும் இந்நிகழ்வைத் தமக்குச் சாதகமாக்கி தமது கெடுபிடிகளை மேலும் உக்கிரமடையச் செய்யும் வாய்ப்பைக் கண்காணிப்புக் குழுவினர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவேளையில் அநியாயத்திற்கெதிராகத் தம்முயிரை ஆகுதியாக்கிக்கொண்ட வேங்கைகள் மூவருக்கும் வட.மாகாண கடற்றொழிலாளர் சார்பில் எமது இதயம் நிறைந்த அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

## வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

நெடுந்தீவுக் கடலில் நடந்த துயரச் சம்பவத்தை இட்டு வலி.தென்மேற்கு சமாசம் மிகவும் ஆழ்ந்த துயரத்தை தெரிவிப்பதோடு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அந்த விடயத்தில் ஒருதலைப் பட்சமாக நடந்துகொண்டதற்கு வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறது.

நெடுந்தீவுக் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மூன்று கடற்புலிகளிற்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அசமந்தப் போக்கினால் இந்த அவலம் ஏற்பட்டுள்ளதையிட்டு மிகவும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

## வட மாகாண அதிபர்கள் சங்கம்

இன்று நாட்டில் நிலவும் இச்சமாதான சூழ்நிலையில் சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களை எதிர்பார்த்து நிம்மதியாக வாழக்கூடிய நிலை எப்போது ஏற்படுமென மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வேளையில் நெடுந்தீவுக் கடலில் எதிர்பாராத துயரச் சம்பவம் இடம்பெற்றிருப்பது மிகவும் ஆழ்ந்த கவலையை அளிப்பதாக அமைந்துள்ளது. அந்த வகையில் எதிர்பாராத நிகழ்வில் மரணமடைந்த மூன்று போராளிகளின் மறைவுக்கு வடமாகாண அதிபர்கள் சங்கம் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றது.

## யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட புலிகளின் றோலர் படகை, பின்னர் கடற்படையினர் தாங்கள் பீரங்கி படகுமூலம் இழுத்துச்செல்ல முற்பட்டபோது அதிலிருந்த மூவரும் படகை வெடிக்கச்செய்து உயிரை மாய்த்துக்கொண்ட சோக நிகழ்வானது கண்காணிப்புக் குழு யதார்த்தமாக உண்மை நிலையை பார்க்கத் தவறிய காரணத்தால் ஏற்பட்டதாகும். இவ்வாறான சம்பவங்கள் சமாதான முயற்சிகளைச் சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட செயலாக நாம் கருதி வன்மையாகக் கண்டிக்கிறோம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சிங்களதேச கடற்படையினரும் கையாண்ட நடைமுறைகள் மிகவும் கண்டிக்கப்படவேண்டியவை. நடுநிலை நின்று உண்மையின் தரிசனத்தை உலகிற்கு கூறவேண்டிய கண்காணிப்புக் குழுவினர் புலிகளின் றோலர் படகு ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி ஜனாதிபதி முதல் சிங்கள பேரினவாதிகளுக்கும், ஊடகங்களுக்கும் நல்ல தீனியாக்கியுள்ளமை உண்மையில் வேதனைக்குரியதே.

## உயர்தர மாணவர் ஒன்றியம்

கடலில் தத்தளித்து நின்ற புலிகளின் மீன்பிடிப்படகை பயிற்சிப் படகு காப்பாற்றி இழுத்து வந்தது. சிறிலங்கா கடற்படை புலிகளின் மீன்பிடி படகை கைப்பற்ற முனைந்து நின்றது. இந்நிலையில் புலிகளுக்கும் கடற்படைக்கும் முறுகல் ஏற்பட்டது. இந்தநிலையில் கண்காணிப்புக் குழு தலையிட்டு தான் சுமுகமாக தீர்ப்பதாக உறுதியளித்தது. இதை நம்பிய புலிகளின் பயிற்சி படகு, மீன்பிடி படகை கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்து கரை திரும்பியது. ஆனால், பின்னர் மீன்பிடி படகிலிருந்த மூன்று போராளிகளும் வீரச்சாவடைந்தனர்.

இப்பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதாகக் கூறிய கண்காணிப்புக்குழுவினர் என்ன செய்தனர் என்பதே எமது கேள்வி. இவர்களால் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க இயலவில்லையா? அல்லது சதி செய்தார்களா? இதுவே எமது மனதைக் குடையும் கேள்வி.

## தீவக மக்கள் நலன் காப்பகம்

நடந்து முடிந்த நெடுந்தீவுத் துயரச் சம்பவம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் நேரடித் தலையீடு ஏற்பட்டதன் பின் - அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு தீர்வு வழங்கவேண்டிய வேளையிலேயே - இடம்பெற்றுள்ளது இதற்கான முழுப் பொறுப்பையும் கண்காணிப்புக்குழுவே ஏற்கவேண்டும்.

அட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்ட தமது படகு தொடர்பாகவும் அவசர உதவிக்காக சம்பவ இடத்திற்கு விரைந்த பயிற்சிப் படகு தொடர்பாகவும் புலிகள் பகிரங்கமாக சகலருக்கும் அறிவித்த பின்னும், கண்காணிப்புக் குழுவினர் சோதனையிட அனுமதித்து அவர்களுக்கு மதிப்பளித்த போதும் கண்காணிப்புக் குழுவினது செயற்பாடு பக்கச் சார்பாகவே இருந்துள்ளமை கண்கூடு.

ஆகவே, தமிழினத்தின் காவலர்களாக விளங்கும், மக்களின் பிரதிநிதிகளான புலிகளின் வீரச்சாவை தமிழர்களாகிய நாம் வெறுமனே கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பதனை தீவக மக்கள் நலன் காப்பகத்தினராகிய நாம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

## வலிகாமக் கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்ட காலம் முதல் இன்றுவரை ஒப்பந்தத்தை மீறும் செயற்பாடுகள் பல ஸ்ரீலங்கா படையினரால் நடைபெற்று வருகின்றது. இதில் கடற்படையினரே பல நடவடிக்கைக்கு காரணமாக இருந்து வருகின்றனர். அந்த வரிசையில் 06.02.2003 அன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் நடந்தது மிகத் துயரமான சம்பவமாகும். இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தையே மீறும் மிக மோசமான நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது.

இந்தச் சமாதான காலத்தில் போராளிகள் மூவர் வீரச்சாவடைந்த சம்பவம் எமக்கு பெரும் வேதனையையும், கண்காணிப்புக்குழுவினர் மீது நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் போராளிகளின் படகு அழிக்கப்பட்ட கடற்பகுதியில் சிறீலங்கா கடற்படையினர், சுழியோடிகள் மூலம் தேடுதல் நடத்தியும் எந்தவிதமான ஆயுத உபகரணங்களையும் கண்டெடுக்கவில்லை. இவற்றை பார்க்கும் போது கண்காணிப்புக் குழுவினரின் அசமந்தப் போக்கும், கடற்படையினரின் அடாவடித்தனமான செயற்பாடுமே இச்சம்பவத்திற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இப்படியான சம்பவங்கள் தொடருமானால் மக்கள் போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும் என்பதை வலிகாமக் கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தினராகிய நாம் தெரிவித்துக்கொள்கின்றோம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 447 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 07.02.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5724386-5739137 |

வெற்றி இலக்கங்கள் 08 11 19 22

லக்கினம்

மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 2,339,200/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,067,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 325,735 | 10 | 3,257,350 |
| 2 இலக்கங்கள் | 29,952 | 20 | 599,040 |
| 1 இல + லக்கினம் | 29,762 | 30 | 892,860 |
| 2 இல + லக்கினம் | 2,709 | 100 | 270,900 |
| 3 இலக்கங்கள் | 788 | 500 | 394,000 |
| 3 இல + லக்கினம் | 88 | 5,000 | 440,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,339,200 | - |
| மொத்தம் | 389,038 | - | 6,254,150 |

மொத்தம் பரிசுத் தொகை ரூபா. 6,254,150

தொடர் இல. 4746345க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 11ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5730768-6-27
5727091-9-91
5732816-8-37
5729059-8-89
5733865-1-16

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3400797 இருந்து
3419712 வரை
சீட்டிழுப்பு இல. 1374
திகதி 08.02.2003

வெற்றி எண்கள் 11 19 39 42 45

போனஸ் எண் 30

ஜக்பொட் பரிசு
ரூபா.3,384,800/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,384,800/- | 3,384,800/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 | 126 | 10,000/- | 1,260,000/- |
| 3 | 5,875 | 500/- | 2,937,500/- |
| 2 | 98,616 | 20/- | 1,972,320/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 11ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 119,848 | 10/- | 1,198,480/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.11,153,100/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 1,500,000/-

தொடர் இல. 2421891க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 12ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3416368-3-01
3419394-0-81
3411432-9-48
3403181-2-38
3404236-4-22

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX

# வாழ்த்துகின்றோம்



## உயர்திரு. லயன் நல்லதம்பி சோமசுந்தரம்

(பிரதம லிகிதர் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்)

அவர்கள் சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட பதில் நீதிவான் திரு. க. அரியநாயகம் அவர்கள் முன்னிலையில் 07.02.2003 இல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, காக்கும் கடவுளான கண்ணன் அருள் பெற்று மேலும் மக்கள் சேவை புரியவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. வைகுந்தகம்பர் V.P.பத்மநாதன்**
*வல்லிபுரக் கோவில் ஆதீன வித்துவான்.*

(C/26459)

---

# சுன்னாகத்தில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை விடுதிகளை திருத்துவதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி விடுதிகளை திருத்துவதற்கான கூறுவிலைகள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து இலங்கை மின்சார சபை வடமாகாண கேள் விச் சபையால் கோரப்படுகின்றது.

**வேலை விவரம்**

01. மின் பொறியியலாளர்,
(யாழ். பிரதேசம்)
இலங்கை மின்சார சபை,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

மேற்படி பிரிவின் கீழ் உள்ள அலுவலர் விடுதி ஒன்று திருத்துதல்.

02. மின் பொறியியலாளர்,
மின் பிறப்பாக்கிகள்,
இலங்கை மின்சார சபை,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

மேற்படி பிரிவின் கீழ் உள்ள தொழிலாளர் விடுதி இரண்டு திருத்துதல்.

மேற்படி கூறுவிலைகளுக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்கள் மீளளிக்கப்படாத கேள்விப்படிவ விண்ணப்பக் கட்டணமாக ரூபா 50/- செலுத்தி அவ்வப் பிரிவு அலுவலகங்களில் 2003.02.11ஆம் திகதி தொடக்கம் 2003.02.18ஆம் திகதிவரை காலை 9.00மணி தொடக்கம் மாலை 2.00மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களின் இரு பிரதிகளில், மூலப்பிரதி வேறாகவும் இணைப்பிரதி வேறாகவும் கவரிடப்பட்டு, கவரின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை மின்சார சபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள விடுதிகளின் திருத்த வேலைகளிற்கான கூறுவிலைகள்" என குறிக்கப்பட்டு இந்த அலுவலகத்திற்கு (பிரதப் பொது முகாமையாளர் அலுவலகம்) தபால் மூலமோ நேரடியாகவோ 18.02.2003ஆம் திகதி பி.ப. 2.15மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் அன்றைய தினம் பி.ப. 2.30மணியளவில் திறக்கப்படும்.

ஒப்பந்தகாரர்கள் தங்களது கூறுவிலைகளை மேலே கூறப்பட்டுள்ள பொறியியலாளர் அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு திருத்தங்கள் செய்யப்படவிருக்கும் விடுதிகளை நேரடியாக பார்வையிட்டு சமர்ப்பிக்கலாம்.

தாமதமாகவும், எம்மால் வழங்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படாத கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

தலைவர்
வடமாகாண மின்சார சபை,
கேள்விக்கோரல்

(C/26460)

பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, 536/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை'

---

# கண்ணீர் அஞ்சலி

## பொன்னம்பலவாணர் விஜயரத்தினம்

(கும்பளை, பருத்தித்துறை)

எமது பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சுகுணாளினி விஜயரத்தினம் அவர்களின் அன்புக் கணவர் **பொன்னம்பலவாணர் விஜயரத்தினம்** அவர்களது மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*வடமராட்சி வடக்கு,*
*பருத்தித்துறை.*

பிரதேச செயலரும்,
நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும். (14352)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12
-
10
-
1979



மறைவு
03
-
02
-
2001

## விக்கினேஸ்வரன் விஜயகுமார்

(பாபு)

பெற்றோர் உற்றோர் பந்தபாசம் துறந்து
வசந்தம் வீசும் வாழ்வுக்கு விடைகொடுத்து
காலனவனின் மின்கரந்த ஈர்ப்புக்கு,
உனது உயிரை பரிசளித்த பாபுவே!
ஆண்டு இரண்டுதான் உருண்டு ஓடினாலும்
நினைவழியா அந்த நாள்களை
மூச்சுள்ளவரை சுமந்து நிற்கின்றோம்.

என்றும் உன் நினைவலைகளில்
ஒன்றித்து நிற்கும்
அம்மா, சுசிலா குடும்பத்தினர்.

*பலப்பந்தனை,*
*உடுப்பிட்டி.* (14356)

---

## நினைவு தினம்

யாழ்ப்பாணம்,பெப.11

யாழ்.மாவட்டக் காணிப் பதிவகத்தில் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் கடமையாற்றிய அமரர் அகிலேசர் பொன்னம்பலத்தின் ஏழாவது நினைவு தினம் நேற்று காணிப் பதிவக உத்தியோகத்தர்களால் நினைவு கூரப்பட்டது.

பதிவக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஒ-10)

---

## தமிழீழ...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்கின்றன. எங்களின் பெண் போராளிகள் அவமானப்படுத்தப்படும் பல சம்பவங்கள் நடக்கின்றன. என்றாலும் நாம் அமைதி பேணுகின்றோம். அதற்குக் காரணம் இருக்கின்றது.

நாங்கள் உண்மையாகவே அமைதிவழியில் - நேர்மையோடு - தீர்வுக்காக உழைக்கத் தயாராக இருக்கின்றோம் என்பதை சர்வதேச உலகுக்கும் வெளிப்படுத்த விரும்புகிறோம். சமாதான வழியில் தீர்வு கண்டதில் இதய சுத்தியோடு உள்ளோம் என்பதைப் பறைசாற்ற விரும்புகின்றோம். அதற்காகத்தான் பல தடவைகள் அவமானப்படுத்தப்பட்ட பின்னரும் அவற்றைச் சகித்துக் கொண்டு பொறுமையுடன் பேச்சுகளில் ஈடுபடுகின்றோம்.

இதற்குமேல் சிங்களதேசம் மிஞ்சிப்போய் யுத்தத்தை எங்கள் மேல் திணித்தால் போராடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. நாம் அதற்கும் தயாராகவுள்ளோம்.

அமைதி வழியில் தீர்வு தமிழருக்குக் கிட்டுவதை - அவர்களுக்கு நியாயம் கிடைப்பதை - விரும்பாத ஜனாதிபதி சந்திரிகா புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தும் ரணிலின அரசை வீட்டுக்கு அனுப்பச் சந்தர்ப்பம் பார்த்திருக்கின்றார். இது குறித்து அரசுத் தரப்பின் பேச்சுக் குழுத்தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடம் கேட்டேன். அவர்களும் இது விடயத்தில் ஆட்டம் கண்டுபோயிருக்கிறார்கள்.

"புலிகள் ஆயுதங்களைச் சுவீகரிக்கின்றார்கள்; ஆள்களைத் திரட்டுகின்றார்கள்; மும்முரமாகப் பயிற்சிகளை கொடுக்கின்றார்கள்; சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை வளர்க்கின்றார்கள்; தங்களை வளமாக்கிக்கொள்கின்றார்கள்; பலப்படுத்திக்கொள்கின்றார்கள். ஆனால், சிங்கள தேசத்தின் நிலைமை அப்படியல்ல. சிங்கள தேசத்தின் பொருளாதாரம் வீழ்ந்து கிடக்கின்றது. சமாதான காலத்திலும் சிப்பாய்கள் இராணுவத்தை விட்டு ஓடுகின்றார்கள். புதிதாகப் படைக்கு ஆள்களை சேர்க்க முடியவில்லை. இந்த நிலைமையால் புலிகளினதும் சிங்கள தேசத்தினதும் இராணுவச் சமநிலையில் பாரதூரமான மாற்றங்கள் - பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நிலைமை கையை மிஞ்சி விபரீதமாகப் போய்க்கொண்டிருக்கின்றது. ஆனால், இது ரணில் விக்கிரமசிங்கவுக்கு விளங்கவில்லை. நிலைமை எல்லை மீற முன்னர் தடுத்து நிறுத்த வேண்டும்" - என்று கூறி ரணிலின் அரசைக் கலைக்க சந்திரிகா தயாராகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இன்னும் இரண்டுவருட ஆட்சிக்காலம் உள்ளது. அதற்கு முன்னர் எப்படியும் ரணிலின் அரசை வீட்டுக்கு அனுப்ப அவர் நடவடிக்கை எடுப்பார். அதற்கான சாக்குப் போக்குக்கு, அவர் காத்திருக்கின்றார். எனவே திடீரென ஒரு தேர்தல் எப்போதும் வரலாம்.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டாலும் நாம் உடனடியாக யுத்தத்திற்குப் போக மாட்டோம். யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்போம். பொறுத்திருந்து தேர்தலைப் பார்ப்போம்.

அந்தத் தேர்தல் சமாதானத்துக்கும் யுத்தத்திற்குமான ஒரு போட்டியாக இருக்கும். சமாதானம் வேண்டுமா? யுத்தம் வேண்டுமா என்பதை சிங்கள மக்கள் தீர்மானிக்கும் ஒரு தேர்தலாக அது அமையும். அவர்களின் முடிவைப் பொறுத்து நாங்கள் நடந்து கொள்வோம். ரணிலின் அரசு மீண்டும் ஆட்சிக்கு வருமானால் அதனுடன் நாங்கள் தொடர்ந்து பேசுவோம்.

பேச்சுமேடையில் விடயங்கள் சிக்கலின்றிச் செல்வதாக நினைக்காதீர்கள் பல சிக்கல்கள், பிரைக்குகள் சர்ச்சைகள் குழப்பங்களுக்கு மத்தியில் தான் அவை தொடர்கின்றன. இயன்றவரை அதைத் தொடர முயற்சிப்போம் என்றார் பாலசிங்கம். (ஒ)

---

# HEART FELT CONGRATULATION



We are extremely glad to convey our heart felt congrautulations to **Mr. Thirunavukkarasu Subenthirarajah.** comaradely called Anna, the Grama Servaka of Puloly East (J/413), under the Point Pedro Divisional Secretariat, Who hasbeen upgraded it Grade I in the post of Grama Servaka.

We also gratefully remember that he has rendered yeoman service in our area for the last thirteen successive year.

We wish him many mor similor promotions in the year to come.

*Puloly South,*
*Point Pedro.*

The Youth
Puttlai, Puloly.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற தங்கள் தன்னலமற்ற சேவை வாழ்க; வளர்க. (14349)

---

# மனதார வாழ்த்துகின்றேன்

என்றும் சேவையுணர்வுடன் சுயநலம் பாராது சேவை புரியும் கைதடி வடக்கு கிராம உத்தியோகத்தர்

## உயர்திரு. சிவசரணநாதன்

அவர்களுக்கு பதவியுயர்வு கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றேன். அவர் சேவைகள், பதவி உயர்வுகள் மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

*மட்டுவில்.* (14353) **R.ரவீந்திரநாதன்.**

---

# பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

தன்னலங் கருதாது சேவையுணர்வுடன் கடமையாற்றும் எமது பகுதி கிராம உத்தியோகத்தர்

## உயர்திரு. க.வாமதேவன்(B.A.)

அவர்களுக்கு பதவியுயர்வு கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றோம். இவரது சேவைகள், பதவிகள் மேலும் வளர உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

J/312 மட்டுவில் மத்தி மக்கள்.

(14352)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
29
-
06
-
1923



மறைவு
13
-
01
-
2003

## அம்பலவாணர் இளையதம்பி

(இளைப்பாறிய ஆசிரியர்)

13-01-2003 திங்கள் சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அ.இளையதம்பி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (12-02-2003) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உறவினர், உற்றார்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*துரைன் தோட்டம்,*
*நெல்லியடி, கரவெட்டி.*

மனைவி: இ.இலட்சுமி,
மகள்: திருமதி ஞா.புவனேஸ்வரி,
மகன்: ஆனந்தராசா (ஜேர்மனி),
மகன்: சிவகுமார், (14355)

---

# மரண அறிவித்தல்கள்

## முத்து தெய்வேந்திரம் (கார் பயிற்றுநர்)

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்து தெய்வேந்திரம் அவர்கள் 05.02.2003 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2003) செவ்வாய்க் கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*211/21, கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (14461)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சின்னையா நாகேஸ்வரி

கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வ.சின்னையாவின் அன்பு மனைவி நாகேஸ்வரி நேற்று (10.02.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சதாசிவம் (புலோலி ப.நோ.கூ.சங்கம்), சத்தியகுணதேவி, ஜெகதாம்பாள், (PHM ,முழங்காவில்), சிவனேஸ்வரி, சதானந்தன் (சவூதி), ஜெகதீஸ்வரி (PHM, MOH. P.Pedro) ஞானேஸ்வரி, காலஞ்சென்ற நளாயினி (மாவீரர் அருணா) ஆகியோரின் அன்புத்தாயாரும் சசிகலா (PHM. MOH, Chava.), சிவசண்முகம், சிவகாமி, உதயகுமார் (யாழ். போதனா வைத்தியசாலை), சற்குணலிங்கம் (சவூதி) ஆகியோரின் மாமியாரும் சேதுகாவலன்(சவூதி), ஜெயகௌரி, விஜயகௌரி, பாலகௌரி, கபிலன், துளசிகன், அர்ச்சனன், சாயூட்சன், லோசிதா, தர்சன், விமல்ஷன், ரம்பா, தர்மிளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2003) செவ்வாய்க் கிழமை நடைபெற்று, பூதவுடல் கிராஞ் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.* (C/26461)

தகவல்:
சி.சதாசிவம்(மகன்)
சி.சதானந்தன் (மகன்)